PAATHUKAVALAN
REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) FOUNDED 19 FEB 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 127
இதழ் 06
பக்கங்கள் 12
விலை 10/=
15 ஏப்ரல்
2003

15 April 2003

St.Joseph's Catholic Press, 360 Main Street, Po.Box.2, Jaffna, Sri Lanka. Tel:- 021-2222378 E-mail:pillai01@sltnet.lk

ISSN No. 1391-7633

## உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ் - 2003

## ஈஸ்டர் வாழ்த்துக்கள் - HAPPY EASTER



இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை
அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை (யோவான் 20:09)

இறை இரக்கத்தில் சமாதானம் நிறைந்த ஓர் உலகைக் கட்டி எழுப்புவோம்

# அமைதிக்கான செயல்பாடுகளில் ஜனாதிபதியின் ஒத்துழைப்பை வேண்ட கத்தோலிக்க ஆயர் பேரவை முடிவு

**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது 2003ஆம் ஆண்டுக்கான முதல் கூட்டத் தொடரினை ஏப்ரல் மாதம் 01,02,03 ஆம் திகதிகளில் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் நடத்தியபோதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.**

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் கூட்டத் தொடரில் ஒன்று வருடத்தில் ஒரு தடவை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் கூடுவது வழமை. 2003ஆம் ஆண்டுக்கான மேற்படி கூட்டத் தொடர் அண்மையில் அங்கு கூடியது. இவ்வாண்டின் முதல் கூட்டத் தொடராக அமைந்த மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட ஆயர்கள் அனைவரும் ஒரு முக்கிய விடயம் பற்றி கலந்துரையாடினர். மிக நீண்ட காலமாக இலங்கை மண்ணில் நடைபெற்று வந்த கொடிய போரும் அதன் விளைவுகளும் நிறுத்தப்பட்டுள்ள இன்றைய நிலையில் நாட்டின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல காணப்படும் தடைகள் பற்றி அவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

அவற்றை நீங்குவதற்காக என்ன செயல்முறைகளை ஆற்றலாம் என்றும் அவர்கள் கலந்தாலோசித்தனர். அவர்களுடைய கலந்துரையாடலின் பின் ஒரு முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. இலங்கை மண்ணில் சமாதானம் ஏற்பட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பங்களிப்பு மிக முக்கியமானது. அவரின் நிலைப்பாடு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஒரு தடைக்கல்லாக இருப்பது போலவே தோன்றுகிறது.

எனவே ஆயர்கள், சர்வமதத் தலைவர்களுடன் இணைந்து ஜனாதிபதியை சந்தித்து இலங்கை மண்ணில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த ஜனாதிபதியின் அவசிய ஒத்துழைப்புத் தேவை என்பதை அவருக்கு வலியுறுத்தித் தெரிவிப்பதென முடிவு செய்தனர்.

ஜனாதிபதியை சந்திப்பதற்கான ஒழுங்குகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## N.C.C. புரட்டஸ்தாந்து சபையினர் இலங்கை கத்தோலிக்க ஆயர்களை சந்தித்தனர்

National Christian Communities என அழைக்கப்படும் N.C.C. புரட்டஸ்தாந்து சபையினர் இலங்கை கத்தோலிக்க ஆயர்களை அண்மையில் உத்தியோகபூர்வமாக சந்தித்தனர்.

மேற்படி புரட்டஸ்தாந்து சபையினரின் கொழும்பு ஆயர் மேதகு சிக்காரோ, குருணாகல் ஆயர் மற்றும் பலரும் இந்த அதிகாரபூர்வ சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அவர்களுடைய இச் சந்திப்பில் இரு முக்கிய விடயங்கள் இணக்கம் காணப்பட்டன. அமைதிக்கான முயற்சிகளிலும் அதுதொடர்பாக விடுக்கப்படும் அறிக்கைகளிலும் தாமும் இணைந்து செயல்பட விரும்புவதாக அவர்கள் தெரிவித்தனர்.

கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயல்பாடுகளில் தம்மையும் இணைத்துக்கொள்ளும்படியும் அது தொடர்பான விடயங்களில் தாமும் சேர்ந்து இயங்க விரும்புவதாகவும் அவாகள் மேலும் தெரிவித்தனர்.

இந்த இரண்டு முக்கிய விடயங்களிலும் இணைந்து செயல்படுவது பற்றி கத்தோலிக்க ஆயர் பேரவையும் மேற்படி புரட்டஸ்தாந்து சபையினரும் இணக்கம் கண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வட்டக்கச்சியில் ஆயர் தவக்கால தரிசிப்பு

ஆயர் தவக்கால ஐந்தாம் ஞாயிறு தினத்தை வட்டக்கச்சி மக்களுடன் செலவிட்டார். இராமநாதபுரம் ஆரோக்கியநாதர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றினார்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பயன்தரும் என்ற கருத்தினை விளக்கி தவக்காலத்தில் ஆணவத்தையும் பெருமையையும் விட்டு நாம் மனம்மாறி புதிய வாழ்வு வாழ வேண்டுமென அவர் அழைப்பு விடுத்தார்.

பங்குத் தந்தை அகஸ்தீன் அடிகளார் மேற்படி ஒழுங்கினைச் செய்து மக்களை உவகை கொள்ளச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாயில் சிலுவைப்பாதை

மானிப்பாய் பங்கின் அனைத்து ஆலயங்களையும் உள்ளடக்கிய நீண்ட சிலுவைப் பாதை 04.04.2003அன்று மானிப்பாய் அன்னம்மாள் ஆலயம் உடுவில் செபமாலை மாதா ஆலயம் ஆகிய இரு ஆலயங்களில் இருந்தும் ஆரம்பமாகி புதுமடம் கர்த்தர் ஆலயத்தை வந்தடைந்தது.

இந் நிகழ்வானது ஒருமித்த கிறிஸ்தவ சாட்சிய வாழ்வின் அடையாளமாக திகழ்ந்தது.

பங்குத் தந்தையர்களான பெனட் அடிகளாரும், மகன் அலோசியஸ் அடிகளாரும் மேற்படி சிலுவைப்பாதையை நெறிப்படுத்தினர்.

R.J.டெவ்லின்.

## கிளி-முல்லை மறைக்கோட்டத்தில் சமாதானக் குழுக் கூட்டம்

ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி கிளி-முல்லை மறைக்கோட்டத்தில் இடம் பெற்ற மேற்படி கூட்டத்திற்கு ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் கொழும்பு செடேக் நிலைய சமாதான திட்டமிடல் பொறுப்பாளர் தேவாவும் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் வழங்க இக்கூட்டத்தின் நோக்கத்தினை விளக்கும் ஆரம்ப உரையை யாழ் மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் ஜெயக்குனார் அடிகள் வழங்கினார்.

சமாதான நடவடிக்கைகளை மக்கள் மயப்படுத்தல் TRO குழுவினருடன் சந்திப்பை ஏற்படுத்தல் எனப் பல விடயங்கள் சமாதான திட்டத்தின் நோக்கங்களாக மேற்படி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குருமனையில் மேற்படி கூட்டம் ஆயர் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

கிளி-முல்லை மறைக் கோட்ட பாதுகாவலன் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி நெறி மேமாதம் நடுப் பகுதியில் இடம்பெறும். விபரங்கள் பின்னர் தரப்படும்.

(ஆ-ர்).

## மன்னார் மறைமாவட்டத்தில் ஐவருக்கு குருப்பட்டம்




ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்டத்தை சார்ந்த ஐவர் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகையால் குருக்களாக திருநிலைப் படுத்தப்படவுள்ளனர்.

லீ. சுரேந்திரன் றெவல், ம. அ. ஜெயசீலன், ச. சத்தியராஜ், செ. அன்ரன், ச. பி. மெரிடீகோல் ஆகிய ஐவருமே குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

மன்னார் மறை மாவட்டத்தில் இவர்களின் அன்புப் பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களை அர்ப்பணிக்கின்றோம்.

## புனித மரியாள் பேராலயம், யாழ்ப்பாணம்

**ஆயர் தலைமையில் புனிதவார திருச்சடங்குகள் - 2003**

13-04-2003 குருத்தோலை ஞாயிறு
காலை 6.30 முதற் திருப்பலி
காலை 8.30 இரண்டாம் திருப்பலி
மாலை 5.15 மூன்றாம் திருப்பலி
14-04-2003 திங்கள்
மாலை 5.00 - குருக்கள் வாக்குறுதி புதுப்பித்தலும் தைலங்கள் மந்திரிக்கும் சடங்கும் திருப்பலியும்
17-04-2003 புனித வியாழன்
மாலை 6.00 - இறுதி உணவு ஞாபகார்த்த திருப்பலியும் நற்கருணை ஆராதனையும்
8.00 மணி தொடக்கம் 9.00 மணி - பொது ஆராதனை
18-04-2003 புனித வெள்ளி
காலை 6.30 - திருச் சிலுவைப்பாதை தியானம் போராலய திறந்த வெளியரங்கில்
மாலை 5.00 - திருச்சிலுவை ஆராதனையும் நற்கருணை பந்தியும்
19-04-2003 புனித சனி
காலை 6.30 - இயேசு திருச்சிலுவையில் மொழிந்த வாக்கியங்களில் தியானம்
மாலை 11.00 - பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையும் திருப்பலியும்
20.04.2003 இயேசு உயிர்த்த ஞாயிறு
காலை 5.30 முதல் திருப்பலி
காலை 6.30 இரண்டாம் திருப்பலி ஆயர் தலைமையில்
காலை 8.30 மூன்றாம் திருப்பலி
மாலையில் திருப்பலி இடம்பெறமாட்டாது.

அருள்திரு. M.A.P.R.சவுந்தரநாயகம்
பங்குத்தந்தை யாழ். பேராலயம்

# போரினால் சிதைந்தவை கட்டடங்கள் மட்டுமல்ல மனித மனங்களும்தான் - பாசையூர் சந்திப்பில் ஆயர்



பாசையூர் இளைஞர்கள் ஆயரோடு கூடியபோது



பங்கின் பக்திச் சபைகள் ஒன்றாக இணைந்து

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ் மறை மாவட்ட பங்குத் திருச்சபைகளின் இறைமக்களை பங்குகள் தோறும் விஜயம் செய்து சந்தித்து வருகின்றார். இந்த வகையில் கடந்த 15ஆம் 16ஆம் திகதிகளில் பாசையூர் பங்கு மக்களை சந்திப்பதற்காக உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருந்தார்.

இந்த இரு நாட்களையும் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் என்பவற்றின் தலத்திருச்சபை மக்களுடன் கழித்தார். இது இம் மக்களுக்கு ஒரு பொன்னான நல் வாய்ப்பாக அமைந்திருந்தது.

ஆயரின் இந்த வருகையானது தனது மந்தைகளை தேடிச்சென்று வழி நடத்தி பாதுகாக்கும் நல் ஆயனுக்கு உரிய செயற்பாடாகவும் தனது இறை மக்கள் மீது தமக்குள்ள பொறுப்பையும், அக்கறையையும், பரிவையும் வெளிப்படுத்தும் தந்தையின் அன்பான அரவணைப்பாகவும்,இறையாட்சியின் ஆளுமையும், உரிமையும் கடமை உணர்வும் கொண்ட செங்கோல் ஒச்சும் தன்மையாகவும் அமைந்திருந்தது.

ஆன்மீக, சமூக, குடும்ப மேம்பாட்டுக்கான அறிவுரைகள், ஆலோசனைகள், திட்டங்கள் என்பவற்றை எடுத்துக்கூறி இறை விசுவாசத்தை ஆழப்படுத்தியதோடு வாழ்வியலின் இலக்கு என்ன என்பதையும் தெளிவுபடுத்தினார் ஆயரவர்கள்.

15ஆம் திகதி சனிக்கிழமை காலை 7மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்திற்கு ஆயர் வருகை தந்த போது மலர் மாலைகள் அணிவித்து மகர தோரணங்கள் அலங்கரிக்கப்பட்ட பாதையூடாக அழைத்துச் செல்லப்பட்டார். போட்டிக்கோ வாயிலில் ஆராத்தி எடுத்து மங்கலப் பொட்டிட்டு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆயர் அவர்களுடன் பங்குத்தந்தை அருட்திரு எஸ். யேசுரட்ணம் அடிகளாரும் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர்.

தொடர்ந்து 11மணிவரை கொழும்புத்துறைப் பங்கில் தங்கி இருந்து பெற்றோர், பக்திச்சபைகள் மற்றும் மேய்ப்புப் பணிச்சபை போன்ற அமைப்புக்களுடன் தனித்தனியாக அளவளாவி இடம்பெயர்வின் பாதிப்புக்களையும், பல்வேறு கருத்துக்களையும், கேட்டறிந்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கிற்கு சென்றபோது ஆயருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இச் சந்திப்பில் ஆன்மீக உரைகள், விளக்கங்கள், பொதுவான வாழ்வியல் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள், திருப்பலிகள் என்பன 16ஆம் திகதி ஞாயிறு மாலைவரை இடம்பெற்றது. பல்வேறுபட்ட பக்திச் சபைகள், இளையோர், பெற்றோர் அமைப்புக்களுடன் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன.

ஆயர் தமது அறிவுரைகளில் போரின் தாக்கங்களினால் சிதைந்து போயுள்ளவை கட்டடங்கள் மட்டுமல்ல, மனித மனங்களும் தான். அவ்வாறான நிலைகளில் உள்ள ஆன்மீக, குடும்ப, சமுதாய கட்டமைப்புக்கள் மீண்டும் காத்திரமான அடித்தளத்தில் இருந்து கட்டி எழுப்பப்பட வேண்டும். பெற்றோர் தமது பொறுப்புக்களை உணர்ந்து பிள்ளைகளை கல்வி, நற்பண்புகளில் சிறந்த பிரஜைகளாக்கி முன்மாதிரியுடன் கூடிய அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். எந்த வன்முறைகளினாலும் அழிக்கமுடியாத கல்விச் செல்வத்தை பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் உரிய முறையில் ஊட்ட வேண்டும்.

இன்றைய குடும்பங்கள் நாள் முழுவதும் தொலைக்காட்சி, சினிமா மோகத்தில் மூழ்கி இருப்பது விலக்கப்பட வேண்டும். இவை பல கலாச்சார சீரழிவுகளை ஏற்படுத்தி சிறுவர்களின் எதிர்காலத்தில் பெரும் பின்னடைவை உருவாக்கும். நாட்டிற்கும், வீட்டிற்கும் சமாதானம் கிடைக்க செபியுங்கள். இச் செபமாலை ஆண்டில் குடும்ப, குழும செபமாலை ஓதி அமைதிக்காக வேண்டுதல் புரியுங்கள்.

இளைஞர், யுவதிகள் கண்ணியத்துடனும் அடக்கத்துடனும் வாழ முற்பட வேண்டும். உங்களது செயற்பாடுகளைத் தான் சிறுவர்கள் அடியொற்றி பின்பற்றுவார்கள். எனவே முன்னுதாரணமாக உங்கள் செயற்பாடுகளை கையாளுங்கள். உங்கள் ஆற்றல், திறமை, ஆளுமை என்பன சமூக உயர்வுக் காக பயன்படுத்தப்பட வேண்டும். போதைப்பொருட்கள், கசிப்பு என்பவற்றை சமூகத்திலிருந்து அடியோடு அகற்றுங்கள். நாளாந்தம் இறைவார்த்தையை வாசித்து அதன்படி உங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார்.

தொகுப்பு : எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை.



திருப்பலியில்



விளையாட்டுக் கழகத்தினருடன் ஆயரும் பங்குத்தந்தையும்

# மேலுலகும் கீழ் உலகும், விண்ணும், மண்ணும் அனைத்துமே யேசு என்னும் நாமத்தில் தங்கியுள்ளது

## கந்தரோடை, சங்குவேலி குழந்தை யேசு ஆலய பெருவிழாவில் யாழ். ஆயர்

உலக மக்களின் நாவில் உச்சரிக்கப்படுகின்ற அற்புதமான நாமம் யேசு. காரணம் எமக்கு இரக்கத்தை, விடுதலையை, விமோசனத்தை பெற்றுத் தருவதனால் ஆகும் - என்று யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் அண்மையில் கந்தரோடை குழந்தை யேசு ஆலய முதல் ஆண்டு பெருவிழாவில் மறையுரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் யேசு என்னும் பதம் மீட்பளிக்கும் பதமாகும். யேசுவின் நாமம் வல்லமைமிக்கது. எம்மை பசாசின் சூழ்ச்சியிலிருந்தும், பொய்யிலிருந்தும் காப்பாற்றுகின்றது. பேய்கள் அதைக் கேட்டு அஞ்சி நடுங்கி ஓடுகின்றன. இந்த நாமத்தின் முன் எதுவும் தலை நிமிர்ந்து நிற்கா. யேசுவின் பெயரால் நாம் பிதாவிடம் கேட்கும்போது வல்லமை மிக்கதாகின்றது. ஆண்டவரின் நாமம் புனிதமானது. அதை கண்டவாறு பாவிக்கக்கூடாது. அன்பாகவும் அவதானமாகவும் பாவிக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் இந்த நாமத்தை மரியாதையோடும், சங்கையோடும், இனிமையாகவும் பாவிக்க வேண்டும். நாம் பாவத்தினாலும், தீமையினாலும் அமிழ்த்தப்படும்போது இந்த நாமத்தைப் பயன்படுத்தி வெற்றி பெறமுடியும்.

எனவே கந்தரோடை சங்குவேலி வாழ் மக்களின் நீண்டகால விருப்பின்படி ஆலயம் அமைக்கப்பட்டு குழந்தை யேசு இவர்களின் பாதுகாவலராக பிரசன்னமாயுள்ளார். அவர் "நீ என்னை மகிமைப்படுத்தப்படுத்த, நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று கூறுகின்றார். எனவே எமது சிந்தனைகளை இறைவனிடத்தில் எழுப்ப, ஆலயம் அமைக்கப்பட்டது. யேசு என்ற மீட்பளிக்கும் நாமத்தினால் மீட்படைய அழைக்கப்பட்டுள்ளோம் - என்று தெரிவித்தார்.

கந்தரோடை சங்குவேலியில் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தின் முதல் ஆண்டு திருவிழா திருப்பலி ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. வலி மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இவ்வாலயத்திற்கு பல்வேறு இடங்களில் இருந்து மக்கள் பெருமளவில் பங்கு பற்றினர்.

இவ்விழா பங்குத் தந்தை பெனற் அடிகளாரின் தலைமையில், உதவிப் பங்குத்தந்தை மகன் அலோசியஸ் அடிகளாரின் வழிகாட்டலினாலும் அயல் பங்குகளின் அனைத்து ஒத்துழைப்புடனும் சிறப்புற நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தகவல்: திருமதி டெவ்லின் றொபேட் ஜேசுராஜன் மானிப்பாய்.

## உலக சமாதானத்தையும் எம் மண்ணில் விடுதலையையும் வேண்டி சிலுவை யாத்திரை

இறை மனித ஒப்புரவின் காலமாக அமைந்த தவக் காலத்தில் இறைமகன் கிறிஸ்துவின் திருப்பாடுகளைத் தியானித்து எமது வாழ்வின் சுமைகளையும் அவரது சிலுவையோடு இணைத்து எம்மைத் தியாகமாக்கி எமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்து இறை இரக்கத்தைப் பெற்றுவாழ பல செப, தப, தியாக முயற்சிகளை நாம் மேற்கொள்கின்றோம். இன்றைய உலகின் போக்கினை நோக்கினும் மனிதனின் பாவவாழ்வு அதிகரித்ததன் விளைவாக அவன் பயங்கரமான சூழ்நிலையை தனது வாழ்வுக் காலத்தில் எதிர் கொள்ளவேண்டியிருக்கின்றது. இதனாலேயே இவ்வுலகம் அமைதியிழந்து தவிக்கின்றது. இந்நிலையிலிருந்து மனித சமூகத்தை விடுவிக்க வேண்டுமாயின் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னிலே தான் மனமாற்றம் பெற முயற்சிக்க வேண்டும். அவ்வாறு மனமாற்றம் பெறும்போது சமூகமும் ஏன்? உலகமுமே நிச்சயம் மாற்றமடையமுடியும்.

இந் நோக்கினை வலியுறுத்தி கடந்த 28.03.2003 அன்று இளவாலைப் பங்கினைச் சார்ந்த ஒன்பது கத்தோலிக்க ஆலயங்களையும் உள்ளடக்கிய மக்கள், திருச்சிலுவைப்பாதை நிகழ்வினை நடாத்தினர். இந்நிகழ்வானது "உலக சமாதானத்தையும், எம் மண்ணின் விடுதலையையும், பங்கு ஒன்றிப்பையும் வேண்டி" இறை இரக்கத்தை பெற முன்னெடுக்கப்பட்டது. இறைமகன் கிறிஸ்துவின் பாடுகளில் தாமும் பங்கெடுத்து தமது விசுவாச வாழ்வை ஆழமாக வெளிப்படுத்தும் முகமாக பெருந்திரளான மக்கள் பங்கு கொண்டதுடன், பிறசமய மக்கள் மத்தியிலும் இந்நிகழ்வு பக்தியுணர்வைத் தூண்டியெழுப்பியதைக் காணக் கூடியதாக அமைந்திருந்தது.

இளவாலைப் பங்குத்தந்தை அருள்திரு B.F.பொனிபஸ் அவர்களின் தலைமையில் அருள்சகோதரர் யஸ்ரின் அவர்களும் இணைந்து சிறப்பாக நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

S.M.வுளோறன்ஸ் (இளவாலை)

## நாம் உயிர்ப்பது எப்போது?

தந்தாய், உமது பெயரை மகிமைப்படுத்தும் - என்ற இறை வார்த்தைக்கு இலக்கணம் அமைக்கவே உன்னதரின் மகன் கிறிஸ்து உலகிலே உதயமாகி உண்மைகள் பல போதித்து, உத்தம நெறியைக் காட்டி, உன்னத வீட்டின் கதவுகளை எமக்குத் திறந்து, உலகோர் யாவரது மீட்பிற்கும் உறுதுணையானார் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக திருச்சபை கற்பித்து எம்மை வழிநடத்தியும் நாம் வாழும் நிலை என்ன என்பதை ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளோம்.

நாம் கொண்டிருக்கும் விசுவாச வாழ்வு எமது ஆன்மீக தாகத்தை நிறைவு செய்வதாக அமைகின்றதா? இதற்காக நாம் மேற்கொள்ளும், செப, தப, தியானங்கள், திருப்பலி வாழ்வுகள், பல்வேறு வழிபாடுகள், அறப்பணிகள் எமது வாழ்விலும் கிறிஸ்துவைப் போன்று உயிர்ப்படைய வேண்டிய அவசியமான நிலைக்கு எம்மை இட்டுச் செல்கின்றதா என்பதை நன்கு உணர்கின்றோமா? இல்லை, இன்னும் உணராது அற்ப விசுவாசத்தில் அந்தரித்தவர்களாகத் தான் வாழ்கிறோமா?

அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை இயேசு தமது உயிர்ப்பினால் மகிமைக்குரியதொன்றாக்கிய போதும் எமக்கு இன்னும் சிலுவை ஓர் துன்பியல் தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது. இந்நிலை எம் உள்ளங்களில் ஏன் எழ வேண்டும்? இயேசுவின் பின்னால் நானும் செல்வேன் என்று கூறிக்கொள்ளும் நான், அவர் தரும் மகிமைப்பொருளான சிலுவையைக் கையேற்கத் தயங்குகின்றேன். சிலுவைதான் நாம் வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றியை அளிக்கும் ஆயுதம் என்பதை ஏற்கத் தயங்குகின்றோம். அதனால் உலகப் போக்குகளுக்கும், அதன் கவர்ச்சி மிக்க ஆதிக்கத்திற்கும் உட்பட்டு மீண்டும் எழமுடியாது கல்லறை வாழ்விற்குள்ளேயே அமிழ்ந்திக் கிடக்கின்றோம். இதனால் எம் வாழ்வின் உயிர்ப்பு தடைப்படுகின்றது.

இறை இயேசுவின் உயிர்ப்பில் பங்கு கொள்ள ஆசிக்கும் நாம் முதலில் எமது கல்லறை வாழ்வுகளான உலக மோகங்கள், அதிகார ஆணவத் தன்மைகள், மாற்றமுடியாத கடின மனப் பாங்குகள், தாழ்மையற்ற நிலைகள், மன்னிக்க மறுக்கும் நிலைகள், பழிவாங்கும் குரோத நிலைகள், அயலவரை அடிமை கொள்ளும் நிலைகள், ஆழ்ந்த இறைபற்றற்ற நிலைகள், துன்பங்களுக்கு முகங்கொடுக்கத் துணிவற்ற தன்மைகள், தற்புகழ்ச்சி போன்ற இருள்சூழ்ந்த கல்லறை வாழ்விலிருந்து துணிவோடும், ஆன்மீக வாஞ்சையோடும் எம்மை உடைத்தெறிய முன்வர வேண்டும். கிறிஸ்து காட்டிய அன்பு, அமைதி வழிக்கு எம்மை மாற்றி பணி செய்யும் பணிவான நிலைக்கும் இறைவிசுவாசம் நிறைந்த மகிமை நிலைக்கும் நாம் மாறும் போதுதான் நாம் உயிர்ப்படைய முடியும். அதுவே நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கு கொள்கின்றோம் என்பதன் அர்த்தத்தை எம்மிலே வெளிப்படுத்த முடியும். இதுவே நமது பாஸ்கா விழாவின் அழைப்புமாகும்

எஸ். எம். வுளோறன்ஸ்
இளவாலை.

## மல்வம் பங்கில் திருப்பாடுகளின் காட்சிகள்

மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் சபையின் பெரிய குருமட மாணவர்களினால் கடந்த 02.04.2003 புதன் மாலை 5.30 மணியளவில் யேசுவின் திருப்பாடுகளின் காட்சிகள் காண்பிக்கப்பட்டன. சோதனை சோதனை சோதனை என்று எமது வாழ்வையே அழிக்கின்ற சோதனைகள் உண்டு. இந்த சோதனைகளை வெற்றி கொண்டு எப்படி எழலாம் என்று யேசுவின் சோதனை நிகழ்வுகள் விளக்கி நின்றன. சோதனைகள் எந்த நேரத்திலும், எந்த வடிவிலும் எம்மை வந்து பற்றிப் பிடிக்கலாம். இறைவனை அறியாது எமது வாழ்வில் எதுவும் நிகழாது. எனவேதான் யேசு, தான் துன்பப்பட்ட காரணத்தினால் துன்பப்படும் எங்களுக்கு ஆறுதல் தருகின்றார் என்பதையும் சித்திரிகரித்தன.

இன்னும் தீர்ப்பிடுதல் யேசுவின் காலத்திலிருந்து வருகின்றது. தீர்ப்பிடுதல் அழிவுக்குரியது. தீர்ப்பிடாதீர்கள் தீர்ப்பிற்குள்ளாவீர்கள் - என யேசு கூறியுள்ளார். ஒரு மனிதனுக்கு தீர்ப்பு வழங்கும்போது அழிவை நோக்கியதாகவே அமைகிறது. மற்றவர்களுக்கு தீர்ப்பிடுவதற்கு முந்தியடித்து நிற்கின்றோம். மற்றவர்களின் ஆளுமையை தீர்ப்பிடுவதால் குறைத்து விடுகின்றோம். மற்றவர்களின் வாழ்வை அழிக்கின்ற எண்ணங்களைப் பிடுங்கி எறிந்து, தீர்ப்பிடாது வாழ்வு வழங்க முயற்சித்து, வாழ்வு தரும் வார்த்தையை வளர்க்க அழைப்பு விடுப்பனவாக அமைந்தன.

இந்நிகழ்வானது 5 காட்சிகளாக காண்பிக்கப்பட்டன. இன்னும் தற்கால நிகழ்வுகளை சித்திகரித்தும் விளக்கி நின்றன. பாவசங்கீர்த்தனம் வழங்கப்பட்டு திருப்பலியுடன் நிகழ்வு நிறைவுற்றது.

தொகுப்பு: திருமதி. R.J. டெவ்லின்.

## நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? வந்து பாருங்கள்

-மோ. தார்சீசியஸ்

நகரிலே, நகரின் சந்தையிலே, கோவிலிலே சில வேளைகளில் நம் நண்பர்களை, புது மனிதர்களைச் சந்திக்கின்றோம். "நீங்கள் எங்கே தங்கியிருக்கின்றீர்கள்? என்று கேட்டால் அவர்கள் தங்கள் முகவரி கொண்ட அட்டையைத் தந்துவிட்டு, இந்த விலாசத்தில், வீட்டில் "வந்து பாருங்கள்" என்று அழைப்பும் தருகிறார்கள். நாமென்ன செய்கிறோம்? நமது உணர்வும் உள்ளமும் என்ன சொல்லுகிறது? கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, "வந்து பாருங்கள்" என்று அழைப்புத் தந்தவரை நாடி ஓடுகிறோம்.

ஒரு நாள் திருமுழுக்கு யோவான் திருமுழுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார். யேசுவும் அவ்வழியே வருகிறார். அப்போது யோவான் யேசுவைக் காட்டி "இதோ கடவுளுடைய ஆட்டுக்குட்டி" என்றார். இதனை கேட்ட யோவானின் சீடர்கள் இருவர் யேசுவைப் பின் தொடர்ந்தனர். அவர்களை நோக்கி, யேசு "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், "ராபீ! நீர் எங்கே தங்கியிருக்கின்றீர்?" என்று கேட்டனர் அதற்கு யேசு, "வந்து பாருங்கள்" என்று பதில் கொடுத்தார். அவர்களும் அவரோடு போய் தங்கினர். அவரைக் கண்டனர் கேட்டனர்.

இன்றும் அன்றுபோலவே யேசு எங்களை அழைக்கிறார். "வந்து பாருங்கள்" என்கிறார். நம்மிலே பலரும் பலவற்றைப் பார்க்கிறோம். வீட்டிலும் சரி, வீதியிலும் சரி, பிரயாணம் செய்யும் போதும் சரி, திருயாத்திரை செல்லும் போதும் சரி, வேலைக்குப் போகும் போதும் சரி, எத்தனை எத்தனையோ காரியங்களை பார்க்கிறோம். நடையைப் பார்க்கிறோம், உடையைப் பார்க்கிறோம், கழுத்தில் உள்ளதைப் பார்க்கிறோம், காது, கைகளில் உள்ளதைப் பார்க்கிறோம். ஆனால் கிறிஸ்துவைப் பார்க்கிறோமா? அது தான் இல்லவே இல்லை. எனவேதான் அவர் எம்மை நோக்கி "வந்து பாருங்கள்" என்கிறார்.

கானாவூர் கல்யாணத்திலே முதன் முதலாக தன் மகிமையை வெளிப்படுத்தினார். எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். இந்தப் புது இரசம் எங்கிருந்து, எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து எத்தனையோ அருங்குறிகள், ஆச்சரியங்கள், அற்புதங்கள் நிகழ்த்தினார். நேரடியாகக் கண்ணுற்றனர் பலர். கல்வாரி மலையில் தன் மகிமையை முழுமையாக வெளிப்படுத்தினார். அத்தகைய யேசு "வந்து பாருங்கள்" என்று எம்மை அழைக்கிறார்.

உங்களுக்காக உயிர்த் தியாகம் செய்து நீங்கள் இழந்ததை மீட்டுத்தர பாடுகள் பட்டேன். ஜெஸ்த்தமனித் தோட்டத்திலே தனிமைப் படுத்தப்பட்டேன். என்னுடைய சீடர்கள் என்னைக் கைவிட்டு விட்டார்கள். எனக்காக விழித்திருந்து செபியுங்கள் என்று அழைப்பு விடுக்கப்பட்ட மூவரும் கூட தூங்கி விட்டார்கள். மரண அவஸ்தைப்பட்டேன். ஆறுதல் கூறுவார் யாருமில்லை. அறிவீர்களா? "வந்து பாருங்கள்" என் நிலையை என்கிறார்.

எந்த வீதிகளில் உங்களைத் தேடி, உங்களுக்காக ஆச்சரியங்கள் புரிந்தேனோ, உங்களுடன் கூட நடந்தேனோ, பெருங் கூட்டமாக என்னை அழைத்துச் சென்றீர்களோ, இன்று அதே வீதியாலே என் கழுத்தில் சங்கிலிமாட்டி, கைகளுக்கு கயிறிட்டு, ஆவேசக் குரலொலியோடு ஒரு கொலைகாரனைப் போல, கள்வனைப் போல கட்டியிழுத்துச் செல்கிறார்களே நீங்கள் அறியவில்லையா? கேள்விப்படவில்லையா? "வந்து பாருங்கள்" என்கிறார்.

கற்றூணிலே கட்டினார்கள், அடித்தார்கள், வதைத்தார்கள், காறித்துப்பினார்கள் இது போதாதென்று தலையிலே முள்முடி, கைகளிலே மூங்கில் தண்டு இதுவும் போதாது என்று "யூதர்களின் அரசனே வாழ்க" என்று நையாண்டிக்கோஷம். பிலாத்து என் மேலாடையைக் கழற்றி, "இதோ மனிதனைப் பாருங்கள்" என்றான். நீங்கள் வந்தீர்களா? அந்த வேளை என்னைப் பார்த்தீர்களா? இப்போதாவது "வந்து பாருங்கள்" என்கிறார்.

பலவீனங் கொண்ட கோபம் சக்தியில்லை. இருந்தும் பாரச் சிலுவையை உங்களுக்காகச் சுமந்தேன். பலமுறை தள்ளாடி வீழ்ந்தேன். தூக்கிவிட்டீர்களா? என்னோடு கல்வாரிப் பாதையிலே கால் நடந்தீர்களா? இல்லை. என்னைப் பத்துமாதம் சுமந்து 30 வருடங்கள் என்னோடு இருந்த அன்னை, கல்வாரிப் பாதையிலே நடந்தாள், என் பின்னே வந்தாள், சிலுவை அடியிலே நான் உயிர் துறக்கும் வரை நின்றாள். என் பிரிய சீடனான அருளப்பரும் கூடவே நின்றார். அப்போது நீங்கள் எங்கே நின்றீர்கள்? என்ன செய்தீர்கள்? "வந்து பாருங்கள்" அழைக்கிறார்.

இதோ பரம பிதா, தன் மகனை சிலுவை மரத்திலே தொங்க வைத்து "கிறிஸ்துவைப் பாருங்கள்" என்று நம்மை அழைக்கிறார். யேசுவும்; "வந்து பாருங்கள்" என்று அழைக்கிறார். நமது பதில் தான் என்ன? நமது செயல் தான் என்ன?

## காவலன் கண்மணிகளுக்கு உயிர்த்த இயேசுவின் அல்லேலூயா வாழ்த்துக்கள்

அன்பர் இயேசுவின் உயிர்ப்பு விழாவை மகிழ்வோடு எதிர்நோக்கிக் காத்திருக்கும் நீங்கள் இந்நாட்களில் அவர் எமக்காக ஏற்ற பாடுகள், மரணத்தினை ஆழமாகத் தியானித்து, அதனால் கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிமையில் பங்கேற்கும் மனப்பாங்கினைக் கொண்டிருக்க வேண்டும். செபத்திலும், தபத்திலும் ஒன்றித்து இயேசுவின் பாடுகளில் நீங்களும் பங்கேற்க முடியும். விடுமுறைக் காலத்தில் இருக்கும் நீங்கள் எதிர்கொள்ளும் பாஸ்கா அர்த்தமுள்ளதாக அமைய இந்நாட்களில் அடிக்கடி சிலுவைப்பாதை செய்வதிலும், திருப்பலியில் பங்குகொள்வதிலும் ஆர்வமாக இருக்க வேண்டும். சிறியதோர் கட்டுரை வழியாக இயேசுவின் உயிர்ப்பின் மகிமையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

உயிர்ப்பிலே உதயம்
உதயத்திலே உயிர்ப்பு

இறைமகன் இயேசுவின் வாழ்வின் நிகழ்விற்கும் கொடுமுடியாய் விளங்கியவை அவரது பாடுகள்-மரணம்- உயிர்ப்பு என்பது நாம் உணர்ந்த உண்மை. இவை மூன்றும் காலம் என்னும் இயற்கை நியதிக்குக் கட்டுப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாய் நிகழ்ந்தன எனினும் இறையியல் நோக்கில் மூன்றின் விளைவும் ஒரே சமயத்தவையே. இயேசுவின் உயிர்ப்பின் மேன்மை அவரது பாடுகளில் ஒளிவீசிற்று. அவரது மரணத்திலும் சுடர் விட்டது. மேலும் இதனை ஆழமாக நாம் சிந்தித்து நோக்குவோமாயின் அவர் பிறப்பிற்கு முன்னும், பிறப்பின் போதும், பிறந்த பின்னும், அவரது உயிர்ப்பின் மகிமை எல்லா நிகழ்வுகளிலும் இரண்டறக் கலந்திருந்தது. உண்மையில் இயேசுவின் பிறப்பும், உயிர்ப்பும் இறைமையின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றன. அதாவது இயேசுவினுடைய உயிர்ப்பும், உயிர்ப்பின் மகிமையும், அவரது பிறப்பில் ஏற்கனவே மறைபொருளாய் உறைந்துள்ளன என்பதை நன்கு உணரவேண்டும். எனவே சிறுவர்களாகிய நீங்களும் கிறிஸ்துவின் உயிர்ப்பினால் வாழ்வும், வாழ்வினால் மகிமையும், உன்னத வீட்டின் பங்காளிகளாகவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை ஏற்று கிறிஸ்துவின் சிறிய கண்மணிகளாக வாழ உறுதி எடுப்போம். உயிர்ப்பினால் வரும் மகிழ்வு எம்மில் நிறைவதாக.

*மீண்டும் அன்புக் கண்மணிகளுக்கு உயிர்த்த இயேசு தரும் சமாதான வாழ்த்துக்கள் உரித்தாகுக.*

*அன்பு அக்கா.*

# புனிதவார வழிபாடுகள்



## குருத்து ஞாயிறு

**திருப்பலிக்கு முன்னுரை**

இன்று நாம் புனித வாரத்தின் முதல் நாளாகிய குருத்து ஞாயிறுக்குள் நுழைகின்றோம். நம் ஆண்டவராகிய இயேசுவின் ஜெருசலேம் நோக்கிய வெற்றிப் பயணம் நமக்கு இன்று நினைவுபடுத்தப்படுகின்றது. இது தவறுகளை இனம் காட்டி உரிமைகளை நிலைநாட்ட தன்னை முழுதும் பலியாக ஒப்புக்கொடுக்கப்போகும் ஒரு செம்மறியின் தியாகப் பயணம். மக்கள் ஒலிவக் கிளைகளை ஏந்தியவர்களாக தெருவெங்கும் அணிதிரண்டு நிற்கின்றனர். இது விடுதலை நாயகனை எதிர்கொண்டு புதிய ஆன்மீகம் படைத்த கூட்டம். எனவே நம் ஒவ்வொருவரின் உள்ளமும் குருத்தோலை யைப் போல உயர வேண்டும். நாம் செப தான தரும ஒறுத்தல் முயற்சிகளோடு மட்டும் நின்று விடாமல் நம் வாழ்க்கையின் வடிவங்களும் புதுப்பிக்கப்பட்டு புனித காலம் எம்மை புனிதர்களாக மாற்ற வேண்டும். இந்த புதிய காலத்தில் இயேசுவின் புதிய சமத்துவமும் சகோதரத்துவமும் நம்மிடையே உருப்பெற நம் இதயங்களைத் திறந்து விட்டு இயேசுவின் பின் செல்வோம். இன்றைய வழிபாடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1) குருத்தோலைப் பவனி 2) திருப்பலி

**குருத்தோலை மந்திரித்தலும் நற்செய்தி வாசகமும்**

தாவீதின் மகனுக்கு ஓசன்னா என்ற பாடலைத் தொடர்ந்து குருவானவர் இன்றைய விசேட திருச்சடங்கின் ஆழமான கரத்தை இறைமக்களுக்குக் கூறி பின்னர் குருத்தோலைகளை மந்திரிப்பார். பின் குருவானவர் திருப்பலிப் புத்தகத்திற்கு தூபமிடுவார். அதனைத் தொடர்ந்து இயேசுநாதர் ஜெருசலெம் நகரில் மாட்சிமையின் மன்னராக பவனி வந்த நிகழ்ச்சியை நற்செய்தியிலிருந்து வாசிப்பார்.

**குருத்தோலைப் பவனிக்கு முன்னுரை**

இன்று ஆண்டவர் இயேசு கழுதைக்குட்டியின் மீது பவனி வந்ததை நாம் நினைவு கூறுகின்றோம். பாலஸ்தீன நாட்டிலே போர்க்காலங்களில் குதிரைகளைப் பயன் படுத்திய அரசர்கள் அமைதியான காலத்தில் கழுதையின் மீது பவனி வருவது அன்றைய வழக்கம். கழுதை அமைதியின் அடையாளமாக சமாதானத்தின் அறிகுறியாக காணப்பட்டது. எனவே ஆண்டவர் இயேசுவும் துன்புறும் ஊழியனாக சமாதானத்தின் அரசனாக அமைதியின் தூதுவனாக சாந்தமே உருவாக தன்னையே தாழ்த்திப் பவனி வருகின்றார். இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்ட மக்களும் அதற்குச் சான்றாக தம் கைகளில் குருத்தோலைகளை ஏந்தியவாறு ஓசன்னா பாடி ஆர்ப்பரிக்கின்றனர். குருத்தோலை வெற்றியின் ஆரவாரத்திற்கு அறிகுறியாகும். இயேசு உயிர் பெற்றது போல் தாங்களும் உயிர்க்கப்படவேண்டும் என்பதற்காக ஆதிக்கிறிஸ்த்தவர்கள் தங்கள் கல்லறைகளில் குருத்தோலைகளை வைத்தனர். எனவே இயேசுவின் பாடுகளில் நாங்களும் பங்கு பெறுவதன் மூலமாக அவரோடு உயிர்க்க முடியும் என்ற ஆழமான விசுவாசத்துடன் குருத்தோலைகளை கையில் ஏந்தியவாறு பவனியாக ஆலயம் செல்வோம். பீடப்பணியாளர்கள் திருச்சிலுவையுடன் முன் செல்ல அதனைத்தொடர்ந்து குருவும் இறைமக்கள் நாமும் செல்வோம்.

**ஆலயம் சென்றடைந்ததும் விளக்கம்:-**

இப்போது இன்றைய வழிபாட்டின் இரண்டாம் பகுதியாக திருப்பலி ஆரம்பமாகின்றது. ஆண்டவர் இயேசு அரச மாட்சிமையோடு ஜெருசலேம் சென்றதுபோல நாமும் இந்த தேவாலயத்திற்குள் காலடி எடுத்து வைத்துள்ளோம். இன்றைய திருப்பலி வாசகங்கள் அனைத்தும் இயேசுவின் திருப்பாடுகளை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

**முதல் வாசகம் :- எசாயா 50:4-7**

இறைவாக்கினர் எசாயா நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதலாம் வாசகம் துன்புறும் ஊழியனைப் பற்றி கூறுகின்றது. இயேசு தனக்கு அடிப்போருக்கு தன் முதுகையும் தன் தாடியைப் பிடுங்குவோருக்கு தாடையை ஒப்புவித்தும் நிந்தனை செய்வோருக்கும் காறி உமிழ்வோருக்கும் தன் முகத்தைக் கொடுத்தும் தன் தந்தையின் திருவுளப்படி துன்பங்களை ஏற்று செயற்படுவதை செயற்படவிருப்பதை இறைவாக்கினர் எசாயா கூறுகிறார்.

**இரண்டாம் வாசகம்:- பிலிப்பியர் 2: 6-11**

திருத்துாதரான தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் ஆண்டவர் இயேசு தன்னையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை தனதாக்கி மனித உருவேற்று தன்னையே தாழ்த்தி சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்ததை கூறுகின்றார். தந்தையாம் இறைவனும் அவருக்கு எப்பெயருக்கும் மேலான பெயரை அருளி உயர்த்தினார். எனவே பாடுகளே உயிர்ப்புக்கும் மகிமைக்கும் வழி சமைப்பதை நாம் காணலாம்.

**நற்செய்தி வாசகம்:- லூாக்கா (22:14-33:56-சுருக்கம் 23:1-49)**

இயேசுவின் திருப்பாடுகளின் வரலாறு இன்று லூாக்கா நற்செய்தியிலிருந்து எடுக்கப்படுகின்றது. இது தூபம், மெழுகுவர்த்தி, வாழ்த்துரை இன்றி சிலுவை அடையாளம் வரையாமல் வாசிக்கப்படும். தன்னையே தந்தையின் திருவுளத்திற்கேற்ப முற்றுமுழுதாக அர்ப்பணித்து இயேசுவைப்போல நாமும் நம்மையே இறைவனுக்கு அர்ப்பணிப்போம். நற்செய்தியில் இயேசு உரத்த குரலில் கூறி உயிர்துறந்தார் என்று வாசித்ததும் அனைவரும் முழந்தாளிட்டு சிறிதுநேரம் மௌனமாக செபிப்போம்.

**குருத்து ஞாயிறுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை:-**

பவனி புறப்படும் இடம்:-

ஆலயத்திற்கு வெளியே ஓரிடத்தில் அலங்கரிக்க வேண்டும். பவனி புறப்படும் இடத்திலிருந்து ஆலயத்தின் வாயில்வரை குருத்தோலைகளால் அலங்கரிக்கலாம்.

பொருட்கள்:-

வெள்ளைத்துணி விரிக்கப்பட்ட மேசை, திருப்பலிப் புத்தகம் பவனிக்கு பாவிக்கும் சிலுவை, நெருப்புடன் தூபக்கால், சாம்பிராணி மெழுகுவர்த்தியுடன் இரண்டு தண்டுகள், தீர்த்தச் செம்பு, சிவப்பு நிறத் திருப்பலித் திருவுடைகள், குருத்தோலைகள்.

திருப்பீடம் :

வழமைபோல பீடம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். திருப்பலிக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் ஆயத்தப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் குருவும் ஏனைய இருவருமாக மூவர் நற்செய்தி வாசகத்தை வாசிப்பர்.

## புனித வியாழன்

**திருப்பலிக்கு முன்னுரை:**

புனித வாரத்தின் பெரிய வியாழனாகிய இன்று நம் தாய்த் திருச்சபையானது மூன்று முக்கியமான நிகழ்வுகளை நினைத்து கொண்டாடுகின்றது. அவை 1. ஆண்ட வர் அன்பினை தம் மக்கள் மீது எடுத்துக்காட்டும் பாஸ்கா விழாவும் 2. இந்த அன்பை அடையாளங்கள் வழியாக எடுத்துக்காட்டிய நற்கருணை விழாவும் 3. இந்த நற்கருணை உலகில் நிலையான இடத்தைப்பெற்று நிலைத்திருக்க அதற்கென பணி யாளர்களை குருக்களை ஏற்படுத்திய குருத்துவ விழாவுமாக அமைகின்றன. இன் றைய நாள் குருத்துவத்தின் பிறந்த நாள் பணியாளன் பரிசேயனாக காணப்படாத தலைவன் அதிகாரங்களையும் அதர்மத்தையும் ஆணவத்தையும் அகற்றி பணிவிடை புரியும் பணியாளனாக மாறுகின்ற நாள். ஆண்டவர் இயேசு நற்கருணையில் தன்னை உடைத்தது போல அவரின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் எங்கள் வாழ்க்கையை மற்றவர்களுக்காக உடைக்க விசேட அழைப்பை பெறுகின்ற நாளாக இது அமைகின்றது.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது 1) வார்த்தை வழிபாடு 2) பாதம் கழுவும் அன்புச் சடங்கு 3) நற்கருணை வழிபாடு 4)

**முதலாம் பகுதி வார்த்தை வழிபாடு**

**i) முதல் வாசகம் வி.ப. (12: 1-8,11-14)**

விடுதலைப் பயண நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேல் மக்களின் பாஸ்கா விழா பற்றி அழகாக எடுத்துக் கூறுகின்றது. பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்பது பொருள். இந்தப் பாஸ்கா உணவானது பாவத்திலிருந்து நம் அனைவரையும் மீட்டு புதிய வாழ்விற்கு அழைத்துச் செல்லும் இயேசுக் கிறிஸ்து ஏற்படுத்திய நற்கருணைத் திருஉணவிற்கு முன்னடையாளமாக விளங்குகின்றது. நாம் எமது பாவ வாழ்விலிருந்து விடுதலைபெற்று அருள்வாழ்விற்கு கடந்து செல்ல இவ் வாசகம் அழைத்து நிற்கின்றது.

**ii) இரண்டாம் வாசகம்:- (1கொரி. 11: 23-26)**

ஆண்டவர் இயேசுவே நம் அனைவரினதும் மெய்யான பாஸ்கா விருந்து. இவர் எமக்காக தன்னையே தியாகப் பலியாக்கினார். எனவே இந்த நற்கருணை விருந்தில் பங்குகொள்ளும் நாம் அனைவரும் அவரின் மரணத்தை நம்வாழ்வில் அறிக்கையிட வேண்டியதன் அவசியத்தை தூயபவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய முதல் திருமுகத்தில் எடுத்துக்காட்டுகின்றார்.

**iii) நற்செய்தி வாசகம் (யோவான் 13:1-5)**

இன்றைய நற்செய்தி வாசகம் இயேசு தன்னுடைய சீடர்களின் பாதங்களை கழுவிய நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி நற்கருணையையும் பிறர் அன்பையும் ஒருபோதும் பிரிக்கமுடியாது என்பதை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இயேசுவின் சீடர்களாகிய நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யவேண்டும் என்பதை தன் சொல்லாலும் செயலாலும் அவர் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

**இரண்டாம் பகுதி : பாதம் கழுவும் சடங்கு**

அன்றைய பாலஸ்தீனாவில் வீட்டுக்கு வருகின்ற விருந்தாளிகளின் பாதங்களைக் கழுவிய அவர்களை வீட்டுக்கு அழைத்து வருகின்ற பணியானது அந்த வீட்டின் அடிமையினாலேதான் செய்யப்பட்டு வந்தது. ஆனால் ஆண்டவர் இயேசு அடிமையின் தன்மை பூண்டு மனிதனின் பாவத்திற்கும் பாவநாட்டத்திற்கும் காரணமான கால்களிலிருந்து தனது பணியினை ஆரம்பிக்கின்றதை நாம் பார்க்கின்றோம். இந்த அற்புத செயலால் தன் பணியை உறுதிப்படுத்தி தான் பணிவிடை பெறவல்ல மாறாக பணிவிடை புரியவே வந்தேன் என்பதை செயலினால் நிரூபிக்கின்றார்.

இன்றைய இந்த சடங்குமூலமாக தன் சீடர்களுக்கு பணிவு, தாழ்ச்சி என்னும் புதிய அறநெறிகளை பயிற்றுவித்து ஆண்டவர் இயேசு எம்மையும் பிறர்மட்டில் பணி விடைபுரிய தயாராகும்படி அழைப்பு விடுக்கின்றார். அத்தோடு மட்டும் நின்றுவிடாது *நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள்* என்று கூறி அன்புக் கட்டளையை அவர்களுக்குக் கொடுத்தார். எனவே ஆண்டவரின் இரத்தத்தினாலும் ஆவியினாலும் ஆட்கொள்ளப்பட்ட தூய வாழ்வாக மாறி புதிய பல பணிவாழ்வை நாமும் தொடங்க ஆண்டவரை மன்றாடுவோம்.

**மூன்றாம் பகுதி நற்கருணை வழிபாடு**

**நான்காம் பகுதி நற்கருணைப் பவனியும் ஆராதனையும்**

ஆண்டவர் இயேசுவின் இறைபிரசன்னத்தை அன்பின் சின்னமாக, வெளிப்பாடாக வெளிப்படுத்தி நிற்பதுதான் இந்த நற்கருணை. இந்த நற்கருணை புதிதாக தயார் செய்யப்பட்ட திருப்பீடத்தினை நோக்கி பவனியாக எடுத்துச் செல்லப்படுகின்றது. எல்லோரும் கைநெகிழ்ந்த நிலையில் ஆண்டவர் இயேசு தனிமையில் காணப்ப டுவதை நினைவுபடுத்த திருப்பலி நிறைவேற்றிய பீடம் வெறுமையாக்கப்படுகிறது.

இந்த நற்கருணை பவனியானது இயேசு தன் சீடர்களுடன் ஜெருசலேம் நகரிலிருந்து ஜெத்சமனித் தோட்டத்திற்கு போனதை எமக்கு நினைவுப்படுத்தி நிற்கின்றது. ஆனால் அவரின் அன்புச் சீடர்கள் அவரை தனியே விட்டு உறங்கி விடுகின்றார்கள். தனித்த இயேசு தன் துன்பத்தில் துணை நிற்க நட்புடன் கூடிய உறவைத் தேடுகின்றார். எனவே ஆண்டவர் இயேசுவின் துன்பமும் வேதனையும் எம் உள்ளங்களையும் தொட்டு நாமும் அவரோடு ஜெத்சமனிக்கு பயணித்து எம் வாழ்வை சீராக்கி எம் ஆன்மீக இலட்சிய பயணத்தில் அவரோடு சேர்ந்து பயணிப்போம்.

**பெரிய வியாழன் வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை**

திருப்பலிக்கு

குரு வெண்ணிற திருவுடை அணிந்திருப்பார். வழமைபோல திருப்பலிக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் வைக்கப்பட்டிருக்கும். இரண்டு நாட்களுக்கு தேவையான அப்பங்கள், கிறிச்சான், பாதங்கழுவும் சடங்கிற்கென தேர்ந்தெடுத்த 12 பேருடன் குருவானவர் கோயில் வாயிலிலிருந்து பவனியாக வருதல்.

## புனித பெரிய வெள்ளி

**திருப்பலிக்கு முன்னுரை**

இன்று ஆண்டவர் இயேசு எமக்காக தன் உயிரைக் கொடுத்த அந்த புனிதநாள். பூமி எங்கும் ஒளி பிரகாசிக்க தன் வாழ்வை தீபமாக்கிய தியாகத் திருநாள். பல மனிதர்களுக்கு பல்வேறு வடிவங்களில் வாழ்வழித்த வள்ளலுக்கு ஒரு சாட்சிகூட இவர் குற்றமற்றவர் என்று சொல்லத்துணியாத பரிதாபக் காட்சியோடு இயேசு இரு கள்வர்களுக்கு நடுவில் சிலுவையில் அறையப்படுகின்றார். இயேசுவின் மரணத்தோடு அவமானத்தின் சின்னமான சிலுவை அபிமானத்தின வடிவமாக உருமாற்றம் பெறுவதைக் காணலாம். ஒருவனின் இன்பத்தில் பலரைக் காணலாம். ஆனால் அவனின் துன்பத்தில் அவன் அழுகின்ற போது அந்த அழுகையைத் துடைக்க மனிதருக்கு தட்டுப்பாடு வருவதை அன்று மட்டுமல்ல இன்றும்கூட எம் சமூகத்தில் நாம் காண் கின்றோம்.

எம் சமூகத்தில் பல்வேறு சிலுவைச் சாவுகளை நாம் நாளாந்தம் பார்க்கின்றோம். அப்பாவி மக்கள் அனாதைகள் ஆக்கப்பட்டு சிலுவையில் அறையப்படுகின்றார்கள். நாமும் எம் சொல் ஆணிகளால் எம் சகோதரங்களை நாளாந்தம் அறைகின்றோம். அறையப்படக் காரணமாக இருக்கின்றோம். எனவே இன்றைய நாளிலே பிறரின் சிலுவையை குறைக்கின்ற மக்களாக தூய சிந்தனைகளோடு எம்மில் பல புதிய மாற்றங்களைக் கண்டு எம் வாழ்வு மிளிர இத் திருப்பலியில் வரம் கேட்டு மன்றாடுவோம்.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. 1. இறைவாக்கு வழிபாடு 2. விசுவாசிகளின் மன்றாட்டு 3. திருச்சிலுவை ஆராதனை 4. திருவிருந்து

**குருவானவர் முகம் குப்புற விழுந்து வணங்கும் முன் விளக்கவுரை**

கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்பவற்றை நினைவுகூர்ந்து இன்று அன்னையாம் திருச்சபையானது மிகுந்த துயரத்தில் அமிழ்ந்து காணப்படுகின்றது. மனிதர்களாகிய நாங்கள் கட்டிக்கொண்ட பாவமே இதற்கு காரணம். இதை திருச்சபையானது ஒப்புக்கொண்டு தாழ்நது பணிந்திருக்கின்றது. இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் வேண்டி அபயக்குரல் எழுப்புகின்றது. எனவே இவை அனைத்தையும் வெளிக்காட்டும் விதமாக இப்போது குருவானவர் பீடம் நோக்கிச் சென்று பீடமுற்றத்தில் தாழ்நீட்டி தரையில் சிரம்பதித்து இறைவனை வேண்டுவார். நாமும் குருவுடன் சேர்ந்து இறைவனை வேண்டுவோம்.

## முதல் பகுதி இறைவாக்கு வழிபாடு

**முதலாம் வாசகம் - (எசாயா 52:13-53:12)**

இன்றைய முதலாம் வாசகத்திலே துன்புறும் ஊழியனாகிய இயேசுக்கிறிஸ்து பற்றி எசாயா இறைவாக்கினர் பேசுகின்றார். நம் அனைவரின் பாவங்களையும் தானே சுமந்த கொண்டு எமக்காக தன்னையே இயேசு பரிகாரப் பலியாக கையளித்தார்.

**இரண்டாம் வாசகம் - (எபிரேயர் 4:14-16 5:7-9)**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகம் மாபெரும் தலைமைக் குருவாகிய இயேசுக் கிறிஸ்து பாவம் செய்யாதவர் இவர் பாவம் தவிர எல்லா வகையிலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டவர் என்று கூறி இவர் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்படிந்து நம் அனைவருக்கும் மீட்பை பெற்றுத்தந்தார் என்று கூறுகின்றது.

**நற்செய்தி வாசகம் - (யோவான் 18:1-19,42)**

புனித யோவான் நற்செய்தியிலிருந்த எடுக்கப்பட்ட இயேசுவின் திருப்பாடுகள் ஊடாக உலகத்தை முழுமையாக அன்பு செய்தவருக்கு சிலுவை மரணமே பரிசாக அளிக்கப்படுவதைக் காணலாம். நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ வேண்டும். மற்றவரை எவ்வாறு வாழ்விக்க வேண்டும் என இயேசுவின் திருப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

## இரண்டாம் பகுதி - விசுவாசிகளின் மன்றாட்டு விளக்கவுரை

எல்லாம் நிறைவேறியது என்று கூறி இயேசு தன் ஆவியை தன் தந்தையிடம் கையளித்து மரணமடைந்ததன் ஊடாக நம் அனைவரையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டார். அவர் எமக்காக எப்போதும் தந்தையிடம் வேண்டியவாறே இருக்கின்றார். இறையருள் வாழ்வை நிறைவாகப் பெற்று ஆன்மீ வாழ்வு வாழ தேவையான வரங்களுக்காக மன்றாடுவோம். சிலுவையில் தொங்குகின்ற நம் ஆண்டவர் இயேசு நம் வேதனையனைத்தையும் அறிந்தவராய் தன் தந்தையிடம் எமக்காக பரிந்து பேசி பெற்றுத்தருவார் என்ற உறுதிப்பாட்டோடு ஒரே உள்ளமும் மனமும் கொண்டவர்களாய் அனைத்துலக திருச்சபையுடன் நாமும் ஒன்றிணைந்து உலக மாந்தர் அனைவருக்காகவும் மன்றாடுவோம்.

## மூன்றாம் பகுதி - திருச்சிலுவை ஆராதனை: விளக்கவுரை



ஒரு சிலுவை மரணமானது ஒருவனுக்கு கிடைக்கின்ற அவமான அவலத் தீர்ப்பாக அமைந்துவிடுகின்றது. ஏனென்றால் பல்வேறு விதமான கொலைகாரர்களையும் துரோகிகளையும் இந்த அவமான சிலுவையிலேதான் தூக்கிலிட்டு கொலை செய்வர். ஆனால் இயேசு மனுக்குலம் ஈடேற்றம் பெற அதனை தன் தோளில் தூக்கி சுமந்த அதிலே தொங்கி இறந்து எமக்கு மீட்பை பெற்றுத்தந்ததன் ஊடாக இந்த சிலுவை மீட்பின் கருவியாக மாறி வெற்றியின் சின்னமாக உருப்பெற்று மகிமை பெற்றதை நாம் காண்கின்றோம். இடறலாக இடுக்காக இருந்த இந்த சிலுவை வாழ்வின் ஊற்றாக உருப்பெறுகிறது. நாம் ஆன்ம வாழ்வு பெற இயேசு சிலுவையில் ஏற்றப்பட்டு தொங்கவிடப்பட்டார். எனவே ஆண்டவர் இயேசு அள்ளித்தந்த அருளிலும் மீட்பிலும் இரட்சணியத்திலும் முழுமையாக பங்குபெற இந்த திருச்சிலுவையை முத்தமிட்டு ஆராதிப்போம். ஆண்டவர் இயேசுவோடு ஒன்றாக இணைவோம்.

## நான்காம் பகுதி - நற்கருணை திருவிருந்து

நமக்காக தன்னைப் பிட்டு, உடைத்து, இரத்தம் சிந்தி பலியான ஆண்டவர் இயேசுவின் ஈடு இணையற்ற தியாகப் பலியானது ஒருமுறை மட்டும்தான் இடம்பெறும் என்பதை நமக்கு நினைவூட்ட இன்று உலகில் எத்திசையிலும் திருப்பலி இடம்பெற மாட்டாது. நற்கருணை விருந்து மட்டுமே இடம்பெறும். எனவே இந்த தியாகப்பலி உணவை உட்கொண்டு ஆன்மீக ஊட்டம் பெற்று இறையருள் நிறைவாகப் பெற்று தூய தியாக வாழ்வு வாழ்வோம்.

**பெரிய வெள்ளி வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை**

ஆலய முற்றத்தில் செந்நிற திருவுடைகள், கிறிச்சான் (மரமணி), திருப்பலிப் பீடம் முற்றிலும் வெறுமையாக இருக்கும். பூசைப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கும் பட்டுத்திரையின்றி தேவநற்கருணைப் பேழை திறந்திருக்கும் வாசக மேடை மீது திருப்பாடுகளை வாசிப்போருக்கு மூன்று வேதாகம புத்தகங்களும் சிறிய மேசையின் மீது திருமேனித்துகில், நற்கருணைத்தட்டு என்பன வைக்கப்பட்டிருக்கும். பீடத்திற்கு முன்னால் சிறிய விரிப்பு விரிக்கப்பட்டு தலையணையும் வைக்கப்பட்டிருக்கும். திருப்பண்ட அறையில் பெரிய சிலுவை எளிதாக அகற்றக்கூடிய வகையில் வெள்ளை அல்லாத ஊதா துணியால் மூடப்பட்டிருக்கும். முத்தி செய்வதற்கு தேவையான திருச் சிலுவைகள், உண்டியல், துடைக்க வெள்ளைத் துணிகள் என்பன வைக்கப்பட்டிருக்கும்.

# ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா

## பாஸ்கா திருவிழிப்பு

**திருப்பலிக்கு முன்னுரை**

உலகில் உண்மையும் நீதியும் உயர்ந்து நிலைபெறும் என்பதை நிரூபித்து சாவினை வென்று வெற்றி வீரனாய் ஆண்டவர் இயேசு உயிர்த்த திருநாளை பெருநாளாக இன்று நாம் கொண்டாடுகின்றோம். இந்த உயிர்ப்பு விழா ஒரு மகிழ்ச்சியின் விழாவாக அகிலம் முழுவதும் அக்களிப்புடன் கொண்டாடப்படுகின்றது. சாவின் கொடுக்கு முறிந்திட மானிட வாழ்க்கைக்கு பொருள் சொன்ன இந்த வெற்றிவிழாவில் மறையுடலாம் திருச்சபை மகிழ்ச்சியால் நிரம்பி வழிகின்றது. பகைமையை அழித்து மாநிலத்திற்கு மன அமைதியை சமாதானத்தை கொணர்ந்த இயேசு இன்று எம் பிளவுபட்ட பகைமை நிறைந்த நம் நாட்டிற்கு சமாதானத்தின் தூதுவர்களாக எம்மை மாறும்படி அழைத்து நிற்கின்றார். இயேசு எமக்கு அளித்த விடுதலைக் கீதத்தை வீதியெங்கும் பறைசாற்றி எம் உறவு விரிசல்களை நெருக்கமாக அழைத்து நிற்கின்றார். இயேசுவின் உயிாப்பை நம் வாழ்வனுபவமாக்கி நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் விசேடமாக எம் நாட்டிலும் இருள் அகற்றி ஒளியேற்றும் மக்களாக மாறுவோம்.

இன்றைய வழிபாடானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1. ஒளி வழிபாடு 2. இறைவாக்கு வழிபாடு 3. திருமுழுக்கு வழிபாடு 4. நற்கருணை வழிபாடு

## முதல் பகுதி - ஒளி வழிபாடு

இந்த தூய இரா வழிபாட்டில் முதல் வழிபாடாக ஒளி வழிபாடு அமைகின்றது. நானே உலகின் ஒளி என்று கூறி தன்னை பின்செல்லும் படி கூறிய ஆண்டவர் இயேசு சாவை வென்று உயிர் பெற்றதை நினைவுகூருமுகமாக பாஸ்கா திரியானது புதிய நெருப்பிலிருந்து ஏற்றப்படுகின்றது. பாஸ்கா திரி இயேசுவின் திரு உடலையும் சுடர்விடும் இந்த ஒளி அவரின் உயிரையும் சுட்டிக்காட்டுகின்றது. இயேசுவின் அன்பு ஒளி புதிய அன்புறவுகளை நம் மத்தியில் மலரவிட அந்த ஒளியாம் நம் ஆண்டவர் இயேசுவிடம் வேண்டுவோம். இதனைத் தொடர்ந்து குருவானவர் பாஸ்கா திரியை புதிய நெருப்பிலிருந்து ஏற்றி கிறிஸ்துநாதர் முதலும் முடிவுமாக அகரமும் நகரமுமாக இருக்கின்றார். காலங்களை எல்லாம் கடந்தவர் என்பதையும் எடுத்துக்காட்டும் முகமாக பாஸ்காத் திரியில் அல்பா, ஒமேகா என்ற கிரேக்க எழுத்தையும் நிகழும் ஆண்டையும் எழுதுவார். பாஸ்கா திரியில் பதிக்கப்படும் ஐந்து சாம்பிராணி மணிகள் கிறிஸ்துவின் ஐந்து மகிமையான காயங்களைக் குறிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து பாஸ்கா பவனி இடம்பெறும். இறைஒளி தொடர்ந்துவரும் நாட்களில் நம்மை நிரப்ப மன்றாடி குருவானவர் பாஸ்கா திரியை கையிலேந்தி கிறிஸ்துவின் ஒளி இதோ என மும்முறை பாட நாம் அனைவரும் இறைவா உமக்கு நன்றி என்று பாடியவாறு பாஸ்கா திரியிலிருந்து பற்றவைக்கப்பட்ட திரிகளுடன் குருவைத் தொடர்ந்து ஆலயத்திற்குள் நுழைவோம். இந்த ஒளியானது நம் உள்ளங்களையும் இல்லங்களையும் நிரப்பி வழிகாட்டுவதாக.

**பாஸ்கா புகழுரை**

செங்கடல் வழியாக இறைவன் இஸ்ராயேல் மக்களை மீட்டெடுத்ததன் ஊடாக மனிதனின் மீட்பு உறுதிப்படுத்தப்பட்டது. மனிதனின் பாவ இருள்நீக்கி அவனுக்கு ஒளிவாழ்வு அளிக்க வந்தவர்தான் ஆண்டவர் இயேசு. இந்த மெழுகுவர்த்தி அந்த ஒளியான இறைவனை குறித்துக் காட்டுகின்றது. இனிமேல் மனிதன் பாவ இருளில் தத்தளிக்கத் தேவையில்லை. மாறாக கிறிஸ்துவின் மீட்பின் ஒளியிலே அவனுடைய மீட்பு உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த வெற்றிகரமான கருத்தை உள்ளத்தே கொண்டு ஒரு கிறிஸ்தவன் -கிறிஸ்துவை புகழ்ந்து போற்றுகிறான். இதை நாங்கள் பாஸ்கா புகழுரையிலே காணுகின்றோம் நம் கைகளிலே எரியும் திரிகளை ஏந்தியவாறு இதற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் பகுதி: இறைவாக்கு வழிபாடு

அன்று இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கை வரலாற்றில் செயற்பட்டு அவர்களின் மீட்பு வாழ்வுக்கு செயல்வடிவம் கொடுத்த இறைவன் இன்றும் நம் ஆண்டவர் இயேசுவின் மூலமாக தொடர்ந்து செயற்படுகின்றார் என்ற விசுவாசத்துடன் வாசகங்களுக்கு செவிமடுக்க நம் கைகளில் காணப்படும் எரிகின்ற திரிகளை அணைத்து விடுவோம். ஒவ்வொரு வாசக முடிவிலும் பாடலின் பின்பு அனைவரும் எழுந்து நின்று குருவுடன் சேர்ந்து செபிப்போம். பழைய ஏற்பாட்டு வாசகங்களைத் தொடர்ந்து ஒளியின் வரலாற்றை இறைவார்த்தையூடாக கேட்போம். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு மகிழ்ச்சியால் நிரப்பப்பெற்று உன்னதங்களிலே என்ற பாடலை ஆலய மணிகள் ஒலிக்க உள்ளம் மகிழ்ச்சியால் மலர பாடுவோம்.

(இன்று பழைய ஏற்பாட்டிலிருந்து 7 வாசகங்களும் புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டு வாசகங்களுமாக 9 வாசகங்கள் வாசிக்கப்படும். ஆனால் தேவை ஏற்படின் பழைய ஏற்பாட்டில் இரண்டு வாசகங்கள் குறைக்கப்படலாம். ஆனால் *செங்கடலைக் கடத்தல் இன்றைய வழிபாட்டின் முக்கியம் என்பதால் அந்த வாசகம் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டும்.*)

1ம் வாசகம் – தொ.நூ . 1:1–2:2 அல்லது 1:1, 26–31, படைப்பின் வரலாறு

2ம் வாசகம் – தொ.நூ . 22:1–18 அல்லது 22:1,2,9,10–13,15–18, ஆபிரகாம் ஈசாக்கை பலியிடுதல்

3ம் வாசகம் – விடு. பயணம். 14:15–15:1 செங்கடலைக் கடந்த வரலாறு

4ம் வாசகம்– எசாயா. 54:5–14, புதிய ஜெருசலேம்

5ம் வாசகம் – எசாயா. 55:1–11 , அனைவருக்கும் மீட்பு அருளப்படுகின்றது

6ம் வாசகம் – பாரூக். 3:9–15 32:4,4, ஞானத்தின் ஊற்று

7ம் வாசகம் – எசேக்கியேல். 36:16–28, புதிய உள்ளம் புதிய மனப்பாங்கு

8ம் வாசகம் – உரோமர். 6:3–11, நாம் கிறிஸ்தவர்கள் என்பதால் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் உரிமையுடன் பங்கு பெறுகின்றோம்.

9ம் வாசகம் : நற்செய்தி – லூக்கா. 24:1–12, சிலுவையில் அறையுண்டு அடக்கம் செய்யப்பட்ட இயேசு தாம் முன்னறிவித்த படியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

## மூன்றாம் பகுதி - திருமுழுக்கு வழிபாடு

இப்போது புனிதர்களின் பிரார்த்தனை பாடப்படுகின்றது. குருவானவர் புதிய நீரை மந்திரிக்கின்றார் குரு பாஸ்கா திரியை நீர்த்தொட்டியினுள் வைத்து ஞானஸ நானத்தால் கிறிஸ்துவுக்குள் அடக்கம் செய்யப்பட்ட அனைவரும் அவரோடு வாழ்விற்கு உயிர்த்தெழ வேண்டுமென்று செபிப்பார். இந்த தூய இரவில்தான் ஆதிக் கிறிஸ்தவ மக்கள் திருமுழுக்கு பெற்றனர். ஆதியிலே ஆலயத்தில் நடுவில் காணப்பட்ட தொட்டிக்குள் இறங்கி அந்த நீரில் மூழ்கி எழுந்து வருவதன் ஊடாக அவர்கள் இயேசுவோடு மரணித்து புதைக்கப்பட்டு உயிர்க்கின்றார்கள் என்பதை நினைவுபடுத்தினர். எனவே நாங்களும் அதே மரணம் உயிர்ப்பில் பங்காளி களாகின்றோம் என்ற உறுதிப்பாட்டுடன் எங்கள் திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பிக்க எம் கைகளில் எரியும் திரிகளை ஏந்துவோம்.

## நான்காம் பகுதி: நற்கருணை வழிபாடு

காணிக்கை மன்றாட்டிலிருந்து நற்கருணை வழிபாடு ஆரம்பமாகின்றது. இறை மக்களாகிய நாம் அனைவரும் அண்டவர் இயேசுவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் மெய்யாகவே பங்கு பெறுகின்றோம் என்ற ஆழ்ந்த விசவாச நம்பிக்கையுடன் தொடர்ந்தும் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

பாஸ்கா திருவிழிப்புக்கு ஆயத்தம் செய்ய வேண்டியவை :

கோயில் முற்றத்தில் எரியும் நெருப்பு, அலங்கரிக்கப்பட்ட பாஸ்கா திரி, சிறிய வாசக மேடை. திருப்பலித் திருவுடைகள் வெள்ளை அல்லது பொன்நிறம், பவனிச் சிலுவை, தூபக் கலசம், சாம்பிராணித் தட்டு, ஐந்து சாம்பிராணி காய்கள், பூசைப் புத்தகம், எழுத்தாணி, பவனியாளர் பயன்படுத்த மெழுகுதிரிகள். பீடம் வழக்கம் போல அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். திரிகள் ஏற்றப்படாமல் தயாராக பீடத்தில் வைக் கப்பட்டிருக்கும். பீட முற்றத்தில் பாஸ்காத் திரியை வைப்பதற்கென அலங்கரிக்கப்பட்ட தண்டு வைக்கப்பட்டிருக்கும். அத்தடன் அலங்கரிக்கப்பட்ட பெரிய பாத்திரத்தில் தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும். வாசக மேடை வழக்கம் போல அலங்கரிக்கப் பட்டிருக்கும். வசதியான இடத்தில் உயிர்த்த இயேசுவின் திருச்சொரூபம் அலங்கரிக்கப்பட்டு திரையிடப்பட்டிருக்கும். சிறிய மேசையில் வழக்கம் போல திருப்பலிக்குத் தேவையான எல்லாப் பொருட்களும், திரு எண்ணெய்கள், கை கழுவத் தண்ணீர்ப் பாத்திரம், திருமுழுக்குத் திருச்சடங்கு நூல், சோப்பு, துவாய், தீர்த்தச் செம்பு போன்றனவும் வைக்கப்பட்டிருக்கும்.

# உயிர்ப்பு ஞாயிறு

ஆண்டவர் இயேசு வெற்றி வீரனாய் உயிர்த்தெழுந்ததை பெருவிழாவாக இன்றைய காலை வழிபாட்டில் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம். உயிர்த்த ஆண்டவர் இயேசுவைக் குறிக்கும் அடையாளமாகிய பாஸ்கா திரியானது இன்று முதல் பாஸ்கா காலம் முழுவதும் முக்கிய வழிபாடுகளின் போது ஏற்றிவைக்கப்படும். அல்லேலுயா கீதம் இன்றுமுதல் பாடப்படும்.

**முதல் வாசகம் - தி.தூ.ப 10:34[a], 37-43**

திருத்தூதர் பணியில் இருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதலாம் வாசகத்திலே இராயப்பர் (பேதுரு) கொர்னேலியவின் இல்லத்தில் ஆற்றிய உரையிலே கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சாட்சியம் பகர்கின்றார்.

**இரண்டாம் வாசகம் - கொலோ 3:1-4, அல்லது கொரி. 5:6-8**

இரண்டாம் வாசகம் உயிர்த் இயேசுக்கிறிஸ்துவே நம் அனைவருக்கம் வாழ்வு அளிப்பவர் என்று கூறுகின்றது.

**நற்செய்தி வாசகம் - யோவான் 20:1-9 அல்லது லூக்கா 24:1-12**

மதலேன் மரியாள் சீமோன் பேதுருவிடமும் மற்ற சீடரிடமும் இயேசு உயிர்த் தெழுந்தார் என அறிவித்தல்.

# சிலுவையின் நிழலில் சிதறிய சிந்தனைகள்

பரிசுத்த வார சிலுவைப் பாதை

## 1. இயேசுவை தீர்ப்பிடும் அநியாய தராசு

இடம்: மளிகைக்கடை

தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது. உருளைக்கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன.

இது ஒரு கொடுமை என்றது உருளைக்கிழங்கு.

வெங்காயம் வெகுளியில் சொன்னது: இது ஒரு பச்சைத் திருட்டு.

இரண்டும் சேர்ந்து குரலெழுப்பின. தராசை முதலில் எடைபோடு.

அந்த உலகமே இப்படித்தான் முரண்பாடுகளால் மூச்சுத்திணறும். உலகில் போதி மரத்தைப் புகழ்வார்கள். புத்தனைப் புதைத்து விடுவார்கள்.

சிலைகளை வைப்பார்கள். சித்தாந்தங்களை மறந்துவிடுவார்கள். தேசத்தைக் கொளுத்திவிட்டு கொடிகளை காப்பாற்றுவார்கள்.

அது போலவே இயேசுவைக் கொன்றோம். சிலுவையை வழிபடுகிறோம்.

தீர்ப்பு சொல்ல வேண்டியவர் கடவுள். ஆனால் குற்றவாளிக் கூண்டில், அவர். இயேசுவுக்கு மரணத்தீர்ப்பு.

இந்த தீர்ப்பு நம்மால் வந்தது. ஈடுபட வேண்டியவர்கள் சமுதாயத்தை விட்டு ஒதுங்கி நின்றதால் வந்த அநியாயத் தீர்ப்பு.

கண்ணுக்கு முன்கொடுமை நடந்தாலும் கண்டு கொள்ளாமல் நாம் இருக்கிறோம்.

அந்த உருளைக் கிழங்கிற்கு இருந்த உறுத்தல் நம்மிடம் இல்லை.

அந்த வெங்காயத்திற்கிருந்த துணிச்சல், துளியும் நம்மிடம் இல்லை.

எனவே இயேசு குற்றவாளியாகிறார்.

> இயேசு மட்டுமல்ல அநியாயங்களால் பாதிக்கப்பட்ட அத்தனை பேரும்.
> மலைபிளந்து கல் உடைந்து கழனி உழுது மரம் அறுத்து வழி அமைத்து வாடிக்கையாய் உள்ளம் உடைந்து வாழ்வெல்லாம் துன்பம் அடைந்து வியர்வையில் மேனி கரைந்து வெயிலில் அழகு குலைந்து பசியில் பலமும் குறைந்து பாடுபட்டு முதுகும் வளைந்து தாங்காத துயரில் வாழும் மக்கள் பலர் இன்று அநியாயமாய் தீர்ப்பிடப்படுகிறார்கள். நாமும் கூட்டத்தோடு சேர்ந்து கூச்சல் போடுகின்றோம்.

அவர்கள் அப்படித்தான் என்னதான் உதவினாலும் முன்னுக்கு வரமாட்டார்கள் அது கடவுளின் சித்தம்.

வாழ்க்கையின் நியதி அது அவர்களின் தலைவிதி . . . . . இப்படியெல்லாம் எத்தனையோ தீர்ப்புகள்.

மனிதத்திற்கெதிரான தர்மத்திற்கெதிரான தீர்ப்புகளைத் திருத்தியெழுதவே இயேசு இந்த அநியாயத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறார்.

இனியும் இயேசுவை நாம் தீர்ப்பிட வேண்டாம். தீமையை ஏற்க வேண்டாம் தீமையை வளர்க்கும் தராசுகளை எடை போடுவோம்

## 2. பணிந்தார் . . . குனிந்தாரில்லை

இயேசு சிலுவையை ஏற்றுக் கொள்கிறார்

இடம்: வீதி

மண்ணை நோக்கி குனிந்திருந்தது தெருவிளக்கு.

இந்தத் தெருவிளக்கு கோழையாய் கைகட்டி, குனிந்து நிற்பதைப் பார்த்தால் வெட்கமாக இல்லையா என்றது காக்கை.

வெகு நாட்களாக தெருவிளக்கின் அருகிலேயே நின்ற தென்னைக்குக் கோபம் வந்தது. காக்கையிடம் சொன்னது,

கூர்ந்து கவனி. தெருவில் ஒளி கொடுத்து பெரிய தொண்டாற்றுகின்றது தெருவிளக்கு. தற்பெருமை இல்லாது அடக்கத்தோடு நிற்கிறது என்றது.

தொடர்ந்து சொன்னது காக்கையைப் பார்த்து

பணிவுவேறு, குனிவுவேறு

இயேசு சிலுவையை பணிவோடு ஏற்றுக்கொள்கிறார்.

இன்னோர் உயிரின் கடமையாற்றவே ஒவ்வோர் உயிரும் பூமியில் எழுகிறது. இயேசு பிறருக்காய் சிலுவைச் சுமையை ஏற்கிறார் இன்று இதை தவறுதலாகப் புரிந்து கொண்டு குட்ட குட்டக் குனிந்து கொண்டிருக்கிறோம் நாம்.

சாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும் ஆண்டான் அடிமை என்றும், ஆண் என்றும் பெண் என்றும் எத்தனையோ விதமான அடிமைத் தளைகள் மனிதனின்மேல் சுமத்தப்படுகின்றன.

இயேசு மனித மாண்பைக் காக்க. மனிதம் சிதைத்த அமைப்புகளை எதிர்த்து நின்றார் எதார்த்தங்களை எடுத்துக்கூறினார்.

எதார்த்தங்கள் எத்தனை தூரத்தில் இருந்தாலும் எட்டிப்பிடிப்பவர்கள் இளைஞர்களே. இளைஞர் இயேசுவும் அப்படித்தான்.

ஆண்டாண்டு காலமாய் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் நிறை வாழ்வுக்காய், மீட்புக்காய் சிலுவையை ஏற்கிறார்.

சுகம் வலி இரண்டும் கலந்தது தேகம். ஒன்று இன்னொன்றின் பூரணம் சிலுவையின் பாரத்தால் உடல் வலித்தது.

> ஆனால் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற சுகம் அதில் இருந்தது. பிறரை மன்னிக்க வேண்டிய சூழல்களில், பொதுநலம் பேண வேண்டிய சந்தர்ப்பங்களில், நான் என்ற அகந்தையை விலக்கி பணிந்து செல்ல வேண்டும்.
> ஆனால் ஆழ் மனம் ஆயிரம் கேள்விகளைக் கேட்கும்.
> பணிந்து செல்வது கோழைத்தனம் அல்லவா?
> பணிந்து செல்வதால் எனக்கு என்ன லாபம்?
> பணிந்து செல்லுதல் கௌரவக் குறைச்சல் தானே!
> இப்படி ஆயிரம் எண்ணங்கள் எழலாம்.
> ஆனால் இலட்சிய வாதிக்கு நான், நீ என்பதைவிட நாம் என்பதே முக்கியம். நான், நீ என்றால் நாவுகூட ஒட்டாது, நாம் என்றால் தான் உதடுகள் ஒன்றுசேரும். இயேசுவின் பாதையில் தன் அன்பு இருக்கலாம் தன்னலம் இருக்கக் கூடாது, தன் மதிப்பு இருக்கலாம் தற்புகழ்ச்சி இருக்கக் கூடாது, தாழ்ச்சி இருக்கலாம் தாழ்வு மனம் இருத்தலாகாது,
> பணிவு வேண்டும் குனிவு கூடாது.

இயேசுவின் பாதையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முதல் பாடம் இதுதான். இலட்சியங்களை அடைய முயலும் போது வரும் இன்னல்களை வரவேற்பது.

## 3. விழுவதெல்லாம். .. .. ..எழுவதற்காக

மானுட மைந்தன் இயேசு முதன் முறையாக கீழே விழுகின்றார்

நேரம்:அதிகாலைப் பொழுது சேவல் கூவியது.

நான் எழும் போது இந்த சேவல் தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகின்றது என்று சூரியன் பூரிப்படைந்தான்.

மாலை வந்தது. பொழுது சாய்ந்தது. சூரியன் மேற்குத் திசையில் சாய்ந்தான சாயும் போது சொன்னது.

நான் விழுகிறேனே. என்னைத் தாங்க யாருமே வரமாட்டார்களா? சூரியன் சேவலை எதிர்பார்த்தான். அதன் சேவையை எதிர்நோக்கினான். ஆனால் சேவல் வரவில்லை. விழுந்து கொண்டே கதிரவன் சொன்னான்.

எழும் போது தாங்க வருகிறவரெல்லாம் விழும் போது தாங்க வருவதில்லை.

மானுடமைந்தன் இயேசு மண்ணில் விழுகிறார்.

மன்னுயிர் காக்க தன்னுயிர் கொடுக்க வந்த இயேசுவை தாங்கிப்பிடிக்க யாருமில்லை. தனது வாழ்வு முழுவதும் பிறரை வாழ வைக்க தன்னை இழந்தவர். கானாவூர் திருமணத்தில் மண வீட்டாரின் மானம் போக வேண்டிய நேரத்தில் தாங்கிப் பிடித்தவர்.

தொழுநோயாளிகள் ஊரில் எல்லைப் புறங்களில் வாழ்ந்தபோது அவர்களைத்தன் பட்டுக் கரங்களால் தொட்டுக் குணமாக்கி அவர்களின் மனித மாண்பை பாதுகாத்தவர். முடவர்களைக் குணமாக்கி சமாரியர்களின் வாழ்வை சரியாக்கி இறையாட்சியின் விழுமியங்களை விழாது தாங்கியவர்.

சுயநலச் சுமையால் கூனிக் குறுகியவர்கள், நாலுபேர் மத்தியில் ஒரு மனிதன் என்ற எண்ணத்தில் தலை நிமிர்ந்து நிற்பதற்காய் பாவிகள் பலரை மனித நேயத்தோடு மன்னித்து, தாங்கிய இயேசு தரையில் விழுகிறார்.

அவர் சுடர் விடுகின்ற சூரியனாய் இலட்சிய இளைஞனாய் புதுமைகளைச் செய்தபோது பசியாற்ற அப்பத்தைக் கொடுத்த போது அவரை காணத் துடித்தவர்கள், தாங்கிப்பிடித்தவர்கள், சிலுவையின் பாரத்தால் கீழே விழுகின்றபோது தாங்க முன்வரவில்லை.

> இது தான் இன்றைய சமுதாயச் சூழல்
> செல்வச் செழிப்பில் வாழும்போது நண்பர்களாய் நல்லவர்களாய் நாலுபேர் நம்மைச் சுற்றியே இருப்பார்கள்.
> செல்வமும் செல்வாக்கும் சென்றுவிட்டால், ஒட்டிக் கொண்டிருந்தவர்கள் தங்கள் உறவை வெட்டிக் கொள்கிறார்கள்.
> உள்ளவனுக்கு உடனே உதவும். பஞ்சத்தில் இருப்பவனுக்குக் கொஞ்சம் பார்த்துத்தான் உதவும்.
> பணம் படைத்தவர்கள் குற்றம் புரிந்தால் இந்தச் சமுதாயம் மறந்துவிடும். ஏழைகளையோ, துறந்துவிடும்.
> பசியோடு இருப்பவனைப் பார்க்காது, இவ்வுலகம் பசிதீர்க்க மானம் விற்றால் பழிசொல்லும்.
> மொத்தத்தில் இந்த ஊருககுப் பழி சொல்லத் தெரியும் வழி சொல்லத் தெரியாது.
> பிறரை தாக்கத் தெரியும் தாங்கத் தெரியாது.
> இதனால் வாழ்க்கைச் சுமையால் விழுவோர் ஏராளம்.

## 4. கன்னியமான தாய் . . . நம் கன்னித்தாய்

அன்னை மரியா அன்பு மகன் இயேசுவைச் சந்திக்கின்றார்.

இடம்:கடலோரம்

கடலோரத்தில் நண்டு ஒன்று நடந்து கொண்டிருந்தது.

மணலில் பதிந்த நண்டின் கால் தடத்தை அலை அழித்துக் கொண்டேயிருந்தது. நண்டுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஒருநாள், நரி கடற்கரை ஓரம் நண்டின் கால் தடம் இருக்கிறதா? என்று தேடி அலைந்தது. வளைக்குள் இருந்து ஓரக்கண்ணால் எட்டிப் பார்த்த நண்டுக்கு, அலை தன் கால் தடத்தை அழித்த காரணம் இப்போது தான் தெளிவானது. அலையின் நட்பை அடிமனத்தால் போற்றி, தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டது. முன்பே காப்பான் அன்பே நட்பு

தாய்மையின் இலக்கணத்தை தரணிக்கு தந்தவள் அன்னை மரியா.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் தன் மகனை சான்றோன் எனப் புகழ்வதையே தாய்மார்கள் விரும்புவார்கள். பட்டம்பெற்று, புகழ்பெற்று செல்வச் செழிப்பில் வாழ வேண்டுமென்று விரும்புவார்கள்.

ஆனால் அன்னை மரியா வித்தியாசமானவள். தாய்ப்பாலூட்டியவள் தன்னலத்தை ஊட்டவில்லை. சுத்தமான உணவு கொடுத்தாள். சத்தியத்தைக் கற்றுக் கொடுத்தாள். தன் மகனின் மீட்புத் திட்டத்தை முன் கூட்டியே தெரிந்திருந்தாள். அதில் தன் பங்கு எத்தகையது என்பதும் அவளுக்குத் தெளிவாயிருந்தது.

எனவே தன் மகனைக் குடிகாரன் ஆயக்காரர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன். தீவிரவாதி, பைத்தியக்காரன் என்றெல்லாம் பழித்துரைத்தபோதும் பயப்படாமல் இமயமாய் நிற்கின்றாள்.

தீயில் முளைத்தவள் வெயிலில் வாடமாட்டாள்.

தன் மகனை அக்கினிக் குஞ்சாகப் பெற்றெடுத்தவள் சமுதாயத்தின் சலசலப்புகளுக்கு அஞ்சுவாளா?

இதயம் வேதனையால் துடித்தது. ஆனால் இலட்சியத்தில் எந்த மாற்றமும் இல்லை. தங்கள் பிள்ளைகளை முந்தானையில் முடிந்துவைத்து வளர்க்கும் தாய்மார்களின் மத்தியில், அன்னை மரியா மாறுபட்டவள்.

பங்கில், சமுதாயத்தில், அன்பியங்களில், இயக்கங்களில் தாங்களும் ஈடுபடாமல், தங்கள் பிள்ளைகளையும் ஈடுபடவிடாமல் வாழ்கின்ற பெற்றோர்கள் மத்தியில் அன்னை மரியா முற்றிலும் வேறுபட்டவள்.

தந்தை இறைவனின் தன்மைகளை நன்றாக உணர்ந்திருத்தவள் அன்னை மரியா. மறு உலக மாடியில் வாழ்பவர் அல்ல மானுட மைந்தன்.

மனிதம் காக்க, மானிட குலத்திற்காய் மடிபவர் என்பதை உலகிற்கு உணர்த்தியவர். ஆன்மாக்களை மட்டும் மீட்பவர் அல்ல நம் தந்தை. முழு மனித விடுதலைக்காய் தன் மகனையே இவ்வுலகிற்கு அனுப்பியவர் என்பதை உணர்த்தியவள் மரியா. மாய வித்தை காட்டி மறைந்து விடுகிறவர் அல்ல நம் இறைவன். மனித வரலாற்றில் செயல்படுபவர் என்று எல்லோருக்கும் எடுத்துச் சொன்னவர் அன்னை மரியா.

ஆதிக்க அரசராகத் தன் மகனை வளர்க்கவில்லை.

ஆதிக்கவர்க்கத்தின் ஆணிவேர்களையும் அநீதியாளர்களின் அடாவடித் தனங்களையும் அழித்தொழிக்கும் விடுதலை வீரனாய் வளர்த்தாள் மரியா.

தன்மகனை சமயங்களுக்குள், சம்பிரதாயங்களுக்குள் சமாதியாக விடவில்லை. உடனிருந்து உரையாடி உறவுகளில் உடன்படிக்கை செய்து புதிய வாழ்வின் நெறிகளில் வளர்த்தாள்.

எனவே தன்மகன் இயேசுவின் இலட்சியப் பாதையில் தன்னை இணைத்துக் கொள்கிறாள்.

> அவளைப்போன்று, நம்மையும் இணைத்துக் கொள்வோம் இயேசுவின் இலட்சியத்தில்.

## 5. தோழமையின் தோள்கள்

சீமோன் இயேசுவின் சிலுவையைச சுமக்க உதவுகிறான்.

இடம்:தையற்கடை

கிழிந்த துணியை தைத்துக் கொண்டிருந்தன விரல்கள். சுட்டுவிரல் அடுத்த விரலைப் பார்த்து துன்பப்படுகிறவர்களுக்கு துன்பப்படுகிறவரே துணை என்றது. அடுத்த விரல் கேட்டதாம், ஏன் அப்படிச் சொல்கிறாய்? என்று. இதோபாரேன், சுட்டுவிரல் சொன்னது,

கிழிசல் துணிக்கு, ஒட்டை ஊசி.

இயேசுவின் சிலவையைச் சுமக்க ஒரு சுமைதாங்கியாக வருகின்றான் சீமோன். தடுமாறுகின்ற பாதங்கள் தள்ளாடுகின்ற உடல் புழுதி படிந்த முகம் கசையடிக் காயங்கள் இவற்றால் உருக்குலைந்திருந்த இயேசுவுக்கு உதவவருகின்றான் சீமோன். சாலை ஓரத்தில் சரக்கு ஏற்றி கைவண்டியைத் தள்ளிக்கொண்டு செல்கின்றவர்கள் தள்ளாடுகின்றபோது உதவ முன்வருவது இன்னொரு கைவண்டிக்காரன்தான். காரில் செல்பவன் அல்ல. செங்கல் சூளைகளிலும் ஓட்டுத் தொழில்சாலைகளிலும் ஒருவருக்கொருவர் துணையாய் இருப்பவர்கள், தொழிலாளர்களே. வறுமையில் வாழ்வோர் விழிநீர் துடைத்தால் மனிதம் நிறைவாகும். இறைமொழி கேட்டு இருப்பதைப் பகிர்ந்தால் இறைமை புலனாகும்.

> களைப்போடு வந்த சீமோன் தனது களைப்பை ஆற்றிவிட்டு வந்து உதவி செய்வேன் என்று சொல்லவில்லை. மாறாக, உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்ற வள்ளுவரின் வார்த்தைக்கு இணங்க இயேசுவுக்கு உதவுகின்றான். இன்று நாமும் சீமோனைப் போல் சிரமங்களில் இருப்போருக்கு உதவவேண்டும். எனது வறுமை நீங்கியபின் வறுமையில் வாடுவோருக்கு உதவுவேன் என்று சொல்ல முடியுமா? எனது சிக்கல் தீர்ந்தபின் பிறர்சிக்கல் தீர்க்கலாம் என்றிருக்க முடியுமா? தனக்கு மிஞ்சியது தான் தானம் என்ற தப்பறையான தத்துவத்தைக் களைய வேண்டும்.

வறுமைக்கும் ஈகைக்கும் தொடர்பில்லை. தாராள மனம் உடையவர்கள் எந்நிலையிலும் பிறருக்கு உதவமுடியும். தாராள மனமே தன்னலமறுப்பின் அடித்தளம். வறியவர், எளியவர், அறியாமையில் உழல்வோர், சிறைப்பட்டோர், சாதிச்சண்டையிலும் சமயச்சண்டையினாலும் சங்கடப்படுவோர், உரிமைகளை இழந்து நிற்கும் தாழ்த்தப்பட்டோர் இவர்களுக்கு உதவிட விரைந்திட வேண்டும்.

## 6. துயர் துடைக்க . . . ஒரு துணிச்சல்

வெரோணிக்காள் இரத்தக் கறைபடிந்த இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்.
இடம்: குளம்

மழை அடைமழை. தவளைகள் மகிழ்ச்சியோடு உரக்கக் குரல் எழுப்பின. குளத்திலிருந்த ஆமை தவளைகளைப் பார்த்துச் சொன்னது. இப்படிக் கத்துகிறீர்களே, உங்கள் குரலைக் கேட்டு பாம்பு உங்களைப் பிடித்து விட்டால் எங்கள் நிலை என்ன ஆவது, தவளைகள் சிரித்தன, நாங்கள் கொஞ்சமும் கவலைப்பட மாட்டோம் என்றது கூட்டத்தின் ஒரு தவளை. இன்னோரு தவளை சொன்னது. மூச்சை இழக்கலாம் பேச்சை இழக்கலாமா?

இயேசுவின் திருமுகத்தை துடைக்க ஒரு பெண்ணுக்குத்தான் துணிச்சல் இருந்தது. அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்பும் நிச்சமும் பெண்பாற்குரிய என்பர் என்று எவனோ ஒரு முட்டாள எழுதிச் சென்றான்.

தலைநிமிர்ந்து நடந்தால் தலையான பாவம், வாய்திறந்து பேசினால் வந்துவிடும் எல்லோர்க்கும் கோபம். பெண்கள் அச்சத்துடனும், நாணத்துடனும் இருக்கவேண்டும். கேள்வி கேட்டால், திமிர் பிடித்தவள் என்று பட்டமும் கிட்டும். நிலம் பார்த்து நடப்பவள் பத்தினி. முகம் பார்த்து சிரித்தால் மோசமானவள் - என்று இந்த சமுதாயம் பெண்களுக்குப் பல பட்டங்களைக் கொடுக்கிறது. ஆண்களுக்கும் அப்படித்தான்.

நல்ல பையன். அமைதியானவன். யாரிடமும் வம்புக்கு செல்லமாட்டான். வீட்டுக்கு வெளியே வரமாட்டான். அவன் உண்டு அவன் வேலையுண்டு. அரசியலுக்கும் அவனுக்கும் வெகுதூரம் - என்று கூறி தன் மகனின் ஈடுபாடற்ற நிலையில் பெருமை கொள்ளும் பெற்றோர் ஏராளம்.

ஓட்டுக்குள் இருக்கும் ஆமைக்கும் வீட்டுக்குள் இருக்கும் இளைஞனுக்கும் என்ன வேறுபாடு? கூட்டுக்குள் இருக்கும் புழுவுக்கும் வீட்டுக்குள் இருக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் என்ன?
வெரோணிக்காள் அடிமைத் தனங்களின் வேரறுக்க உரிமையை நிலைநாட்ட, துன்பம் துடைக்கும் கடமையைச் செய்ய தடைகளைக் கடந்து செல்கிறாள்.

அக்கம் பக்கம் நடப்பதைப் பற்றி அறிந்து கொண்டேனா? அழுகுரல் சத்தம் புலம்பல் கேட்டு கவலைப்பட்டேனா?
பக்கத்து வீட்டில் இருப்பது யாரென்று விசாரித்தேனா? பணிவுடன் நெஞ்சைத் தொட்டு நீயும் கேட்டாயா வினா?

இது ஒரு புரட்சிப் பாடல். வெரோணிக்காள் போன்ற புதுமைப் பெண்களின் புதிய பாடல். மூச்சை இழக்க நேர்ந்தாலும் பேச்சை இழக்க விரும்பாதவர்கள் விரும்பிப் பாடும் பாடஷ். உதவி செய்ய வேண்டுமென்றால் மரபுகளையும் மதச்சடங்குகளையும் தாண்டி செயற்படும் மனிதர்கள் மனத்தில் வைக்கவேண்டிய பாடல். வெரோணிக்காவைப் போன்று வீரப் பெண்மணிகள் இன்றைய சமுதாயத்திற்குத் தேவை.

## 7. விழுந்தது விதை . . . எழுந்தது வீரம்

இயேசு இரண்டாம் முறையாக கீழே விழுகிறார்.
இடம்: வான்வெளி

வெயிலில் வெகுதூரம் பறந்து வந்த நாடோடிப் பறவைகள் மேகங்களின் இடையே நுழைந்தபோது குளிரில் நனைந்து களித்தன. மகிழ்ந்தன. கொஞ்ச நேரத்தில் மேகங்கள் மழைத்துளிகளாகக் கீழே விழத் தொடங்கியது.

ஐயோ நல்ல முகில்கள் விழுகின்றனவே என்று ஏங்கி இரங்கி அழுதது ஒரு பறவை. வழிகாட்டிய பறவை சொன்னது, எல்லாம் நன்மைக்கே. முகில்கள் மழையாக விழுந்தால்தான் குளங்கள் நிரம்பும். குளங்கள் நிரம்பினால்தான் மீன் அங்கு வளரும். மீன் வளர்ந்தால் நாம் மீன்களைப் பிடிக்கலாம். மரங்கள் தழைக்கும், நாம் கூடு கட்டலாம். அது மீண்டும் சொன்னது,
நல்லவர்கள் எழுந்தாலும் நன்மைக்கே, விழுந்தாலும் நன்மைக்கே

சரித்திரத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் பல நல்ல தலைவர்கள் விழுந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விழுந்தது சுயநலத்துக்காக அல்ல. பிறர் நலத்திற்காய் பொதுநலம் பேணும் புரட்சிப் பாதையில் விழுந்தவர்கள். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பார்கள். இயேசு விழுந்தார் சிலுவையின் பாரத்தால். சிந்தனைத் தடுமாற்றத்தால் அல்ல. அவர் விழுவதிலும் அர்த்தம் இருந்தது.

நாம் விழுவதைவிட எழுவதில் அர்த்தம் இருக்க வேண்டும்.
சமூகச் சூழல்கள், பொருளாதார நெருக்கடிகள் நம்மை நெருக்கும்போது நாம் தடுமாறுகிறோம், தள்ளாடுகிறோம், கீழே விழுகின்றோம்.
ஆனால் கீழேவிழுவது தோல்வியல்ல. வெற்றியின் படிக்கட்டு.

தோல்வி நிலையென நினைந்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா? வாழ்வை சுமையென நினைத்து தாயின் கனவை மிதிக்கலாமா? இது கவிஞனின் கூற்று. விழவிழ எழுவோம் விழவிழ எழுவோம் ஒன்று விழ நாங்கள் ஒன்பதாய் எழுவோம் தண்ணீர் விட்டோ எரிமலை தணியும் . . .
எழுவோம் . . . இயேசுவின் பாதையில் நடப்போம்.

## 8. உலகின் சுமை தாங்கிய உன்னத உள்ளம்

எருசலேம் பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்
இடம்: புல்வெளி

வானம் இரவின் பிடியில் அழுந்திக் கண்ணீர் விட்டது. வானத்தின் துன்பத்தை எண்ணி வருந்தியது பசும்புல். ஒவ்வொரு நாளும் அந்தக் கண்ணீர் துளிகளால் ஓங்கி வளர்ந்தது. பச்சை பச்சையாய் பசும்புல் தரை உருவானது. இதைக்கண்ட காலைக்குருவி பாடியது. ஏங்குவான் கண்ணீரைத் தாங்குவான் உயர்வான்.

சிலுவையில் சாவைஎட்டிப் பிடிக்கும் கணத்திலும் கனிவு. ஊருக்கு நிழல் வாங்க தன் தலையில் வெயில் தாங்கும் விருட்சம்போல தன் இதயத்தில் பிறர் வேதனை தாங்கும் தேவனைக் காண்கிறோம். கண்ணீர்விட்டு தேம்பிஅழுத பெண்களைத் தேற்றுகிறார் இயேசு. கடவுளாயிருந்தும் மனிதனானார் மனிதனிலும், அடிமையானார். ஏழைகள் வாழ்வு க்காய் ஏணியானார் தோழமையில் துயர் துடைக்கும் தோணியானார். தன்துயர் மறந்து நம் துயர் நினைத்தார். தன்னலம் துறந்து நம் நலம் நாடினார். இதுதான் இறைமை இதுதான் மனிதம். மனிதம் காக்க வேண்டுமானால் மனிதமனம் இன்னும் கொஞ்சம் பணிவு காட்டவேண்டும்.

சாக்கடையிலும் தாழ்ந்து பணிந்தோடி வரும் தண்ணீர் போல நெஞ்சம் துயரத்திலும் நன்மை காணவேண்டும். மரணம் வரைக்கும் சென்ற விதை விருட்சம் காண்பது போல எண்ணங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் தட்டான் தட்டலில் உதிரும் தங்கமும் நகையாகும் என்று நம்புதல் போல் உடல் கொஞ்சம் உறுதி பெறவேண்டும். தன்னினும் வலியது தாங்கிச் சுமக்கும் தண்டவாளம் போல ஞாபகம் கொஞ்சம் பகைமை மறக்கவேண்டும். உயரப் பறக்கப் பறக்க மனிதன் கிழித்த கோடுகள் மறைவதுபோல உணர்வு கலங்குதல் தவிர்க்க வேண்டும். கடமை செய்யும்போது கண்கலங்காத வெட்டியான் போல விழிகள் எதிலும் நல்லது காணவேண்டும். வேப்பம் பூவிலும் தேன்பிரித்தறியும் தும்பியைப்போல முயற்சி இலட்சியத்தோடு இலக்கு தொடவேண்டும். பயணத்தின் இறுதிவரை கூடு துறந்துவிடாத நத்தையைப் போல இயேசுவின் பாதை ஆறுதல் அளிக்கும் பாதை அழவேண்டியதல்ல, நமது கடமை. பலர் அழுகையை மாற்றுவது வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பது.

## 9. மண்ணைத் தொட்ட விண்ணக மைந்தன்

இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகின்றார்.
இடம்: சோலைவனம்

இலையுதிர் காலம். இலைகளெல்லாம் உதிர்ந்து மரம் மொட்டையாக நின்றது. புல்மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின. உன் இலைகள் விழுந்து கொண்டிருக்கின்றன. உன்னைப் பார்த்தால் அழவேண்டும் போல் இருக்கிறது என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறுயது, மரம்சொன்னது, நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும். நிமிர்ந்து நின்றது மரம், அது சொன்னதாம்: விழுவதற்கெல்லாம்அழுவதற்கில்லை.

இந்த உலக வாழ்க்கையே இப்படித்தான். இயேசுவின் சிலுவைப் பாதை நம் சிந்தனைகளை சீராக்க வேண்டும். நாம் விழுந்து விடுவோம் என்ற பயத்தில் விழுந்து விடுகின்றோம். நாம் மட்டும் நினைத்தால் இந்த உலகில் மாற்றம் வந்துவிட முடியுமா? என்ற அவநம்பிக்கையில் விழுகின்றோம்.

என்னதான் சொல்லி, யார்தான் மாறினார்கள். ஊரைமாற்ற உலகைமாற்ற நினைத்து யாரையும்மாற்ற முடியவில்லை, இறுதியில் என் பெயரை மாற்றினார்கள் பைத்தியக்காரன் என்று, என்ற விரக்தியில் விழுந்து விடுகின்றோம். ஆனால் இயேசுவைப் போன்று எழவேண்டும். ஈரமற்ற நெஞ்சு கொண்ட ஈனர் மாய்க்கவே ஏழையை மிதித்து வாழும் எத்தர் வீழ்கவே. கோழை என்று நம்மை எண்ணும் கொள்கை போக்குவோம் என்ற சிந்தனையோடு எழுவோம். இயேசுவோடு இணைவோம். பயணம்தொடரட்டும் . . .

## 10. விடுதலை வீரனுக்கு ஒரு வெகுமதி

இயேசுவின் ஆடைகளை உரிகின்றார்கள்.
இடம்:சாலை

கொதிக்கும் வெயிலையும், குடைபிடித்துப் போனமனிதனையும் மின்கம்பம் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தது.
என்னடா இந்த உலகம் என்று தனக்குள்ளேயே அது சிரித்துக் கொண்டது. பெருமூச்சோடு சொன்னதாம் நிழல் கொடுக்கும் குடைக்கு வெயில்
இந்த உலகின் நியதிகளே இப்படித்தான்.

அடிமை வர்த்தகத்தை அடியோடு சாய்க்க உழைத்த ஆபிரகாம் லிங்கனுக்குக் கிடைத்தது துப்பாக்கிக் குண்டு. மார்டீன் லூதர்கிங் பெற்ற வெகுமதி துப்பாக்கிக்குண்டு. அண்ணல் காந்தியடிகளுக்கும் கிடைத்த வெகுமதியும், துப்பாக்கிக் குண்டுதான். எல்சல்வடோர் நாட்டின் மக்களுக்காய் உழைத்து அவர்களை மூடநம்பிக்கைகளிலிருந்தும், போலிப்புண்ணியங்களிலிருந்தும் விடுவிக்க முயன்ற பேராயர் ரொமேரோவுக்கு என்ன வெகுமதி கிடைத்தது? துப்பாக்கிக்குண்டு. இவ்வாறு எத்தனையோ நல்ல மனிதர்கள் நம்மனக்கண்முன் வருகின்றார்கள். சமூகப் பணியில் ஈடுபடுவோர் பலர் சித்திரவதைகளுக்குள்ளாதல் மானபங்கப்படுத் தப்படல், பொய், புரளிகளால் புண்படுத்தப்படல் இன்று சாதாரண நிகழ்ச்சிகளாய் மாறிவிட்டன. இந்நிகழ்ச்சிகள் உண்மையின் ஆடைகளை உரித்தெடுக்கும் நிகழ்ச்சிகள் உண்மையை ஊனப்படுத்துபவை.
உலகை உருவாக்கும் இவர்கள்தான், தங்கள் வாழ்வில் சுமையைத் தாங்கி பிறருக்கு நிழல்கொடுக்கும் குடைகள்.

இயேசுவின் பாதையில் செல்லவிரும்பும் பலரும் ஆடைகள் உரியப்படுகின்றபோது இலட்சியங்களை உதறித்தள்ளிவிட்டு ஓடிவிடுகின்றார்கள்.
ஆனால் இயேசு தன்தந்தையின் திருவுளம் நிறைவேற்ற நிர்வாணத்தையும் ஏற்றுக்கொள்கின்றார்.

## 11. அன்பு மனதுக்கு ஆணிகள் பரிசு

இயேசுவை சிலுவையில் அறைகின்றார்கள்
இடம்:காடு

காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. செப்புக்கம்பி அதனை துளைத்தபோது ஐயோ வலிக்கிறதே! என்று அழுதது.
கொஞ்சம் பொறுத்துக் கொள் என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் மொழி சொன்னது காற்று. மூங்கில் புல்லாங்குழல் ஆனது.
மேடையில் உலகே வியக்கும் இசையை அள்ளிப் பொழிந்துகொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனிசிலிர்த்தது காற்று. எல்லோரும் புல்லாங்குழலைப் பாராட்டினார்கள். அது மெல்லச் சொன்னது புண்பட்டவன் பண்பட்டவன்.

இயேசுவின் கரங்கள் புண்படுத்தப்படுகின்றன. இறையாட்சி பண்படுத்தப்படுகிறது. நிலத்தைக் கிழித்துப் புண்ணாக்கினால் விளைச்சல் கிடைக்கும். தங்கத்தைச் சுட்டு உருக்கினால் நகைகள் கிடைக்கும். மனதைச்சுட்டு பண்படுத்தினால் மனிதம் கிடைக்கும். மனிதம் மலர இறையாட்சியை இம்மண்ணில் உருவாக்க ஆணிகள் துளைக்கப்பட அனுமதித்தார். இது சமுதாயத்தின் சுயநலப் போக்கில் உருவான நிர்ப்பந்தங்கள். சமுதாய ஏற்றத்தாழ்வுகள் சங்கடம் வருவிக்கும் நிகழ்ச்சிகள் ஆண்டான்அடிமை அமைப்புகள் தொழிலாளி முதலாளி வேற்றுமைகள் சாதிசமய புதைகுழிகள் இவை மனிதனால் உருவாக்கப்பட்டவை

சமுதாய மாற்றத்திற்காய் உழைக்க முன்வருபவர்கள் இப்படித்தான் ஆணிகளால், வாழ்க்கைச் சிலுவையில் அறையப்படுவார்கள். ஆனால் ஒவ்வொரு ஆணியிலிருந்தும் அடுக்கடுக்காய் முளைத்தெழும் அக்கினிக் குஞ்சுகள் . . . ஆண்டவன் இயேசுவின் அன்புப் பாதையில் தொடருவோம். அன்புக்காய் சிலுவையில் ஆணிகளை ஏற்போம்.

## 12. உயிர் பிரிந்தது . . . மனிதம் உயிர்த்தது

இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்.
சந்திப்பு:சூரியனைப் பார்த்து நிலம் கேட்டது நீ செய்தது சரிதானா? சூரியன் அதிர்ச்சியடைந்தான். காரணம் இதுவரை அவனை யாருமே இப்படிக் கேட்டதில்லை. என்ன சொல்கிறாய்? இருளை மறைக்கலாம். அழகான விண்மீன்களை எப்படி நீ மறைக்கலாம்? சூரியன் திடுக்கிட்டான். ஒவ்வொரு ஒளியிலும் அழகு இருக்கிறது. உனக்குத் தெரியுமா? சூரியன் மேகத்துள் மறைந்தான். நிலத்தின் குரல் அவன்காதில் ஓங்கி ஒலித்தது.
வெளிச்சத்தை மறைக்கலாமா வெளிச்சம்.

தயிருக்கு வெளியே வெண்ணெய் திரளாது வாழ்வுக்கு வெளியே ஞானம் பிறவாது என்பார்கள். சிலுவைக்கு வெளியே மீட்பு இல்லையென்று நம்பினார் இயேசு. சிலுவையின் வழியாகவே அதை உலகிற்கு உணர்த்தினார். வாழ்வின் அருகே சாவென்று வருத்தமில்லை சாவின் அருகிலும் வாழ்வென்று மகிழ்கிறேன் என்பதுதான் அவரது சித்தாந்தம். இயேசுவின், முதல்மூச்சும் இறுதிமூச்சும் நமக்காகவே. அவருடைய வாழ்வால் பலருக்கு வாழ்வு கிடைத்தது.

இயேசு இறப்பதை யாருமே விரும்பவில்லை. அவரோடு இறப்பதையே விரும்பினார்கள். இயேசு சிலுவைச் சாவை எதிர்பார்த்தார். போலிப் புண்ணியங்களைப் போதித்தவர்களை போலி என்று எடுத்துக் காட்டினார் எனவே சூரியனை மறைக்க சூழ்ச்சி செய்தார்கள். சூரியனை எடுத்துவிட்டால் இருட்டில் இருட்டடிப்பு செய்யலாம் என்றுஎண்ணி இயேசுவைக் கொலை செய்தார்கள். குட்டி ஆடு தப்பிவந்தால் குள்ளநரிக்குச் சொந்தம். குள்ளநரி மாட்டிக்கிட்டா கொறவனுக்கு சொந்தம். தட்டுக் கெட்ட மனிதர் கண்ணில் பட்டதெல்லாம் சொந்தம் சட்டப்படி பார்க்கப்போனால் எட்டடிதான் சொந்தம் ஒரு சூரியனை மறைக்க நினைத்ததால் இன்று எத்தனை எத்தனையோ சூரியன்கள் வைகறை வானில் . . . ஒரு கோதுமை மணிமடிந்தால் ஓராயிரம் கோதுமைச்செடிகள் முளைக்கும் என்பது இயற்கையல்லவா.

முழுமை கருதி மிகுதி மூன்று நிலைகளும் 11ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# நல்ல கள்வன் திருவிழா

பல புனிதர்களை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் நல்ல கள்வன் குறித்து எவரும் அறித்ததாக தெரியவில்லை. மற்ற புனிதர்கள் விண்ணகத்திலிருப்பது உண்மை. ஆனால் நல்ல கள்வன் போன்று அவ்வளவு நிச்சயமாக (லூக்23:4-3) விண்ணகத்திலிருப்பது நமக்கு குறிப்பிடப்படவில்லை.

புனித லூக்கா தனது நற்செய்தியில் (லூக்23:39-43) குறிப்பிட்டதாவது "சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரை பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகின்றோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லை! என்று பதிலுரைத்தான். பின்பு அவன் இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற் கொள்ளும் என்றான். அதற்கு இயேசு அவனிடம் "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்.

இவ் வார்த்தைகளில் இரு செயல்களைக் காண்கின்றோம். முதலில் கள்வன் தன் குற்றத்தை தாழ்மையுடன் ஏற்றக் கொள்கிறான். பின்பு இயேசுவில் தான் கொண்டுள்ள முழு நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான். சிறந்த மனஸ்தாபத்திற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

16ஆம் நூற்றாண்டில் பரோணுயுஸ் என்பவர் புனிதர்களின் பட்டியலை தயாரித்தார். இன்றுள்ள பட்டியல் ஏறக்குறைய அவர் தயாரித்தது தான். மார்ச் 25 இல் நல்ல கள்வன் விழாவைக் குறிப்பிடுகிறார். ஏனெனில் சில பரம்பரையினர் கிறிஸ்துவின் மரணத்தை இத்திகதியில் நினைவு கூர்ந்தனர்.

சில போலி வேதாகமங்கள் அவருக்கு தீத்துஸ் அல்லது தீஸ்மாஸ் என பெயர் குறிப்பிட்ட போதிலும் பரோணுயுஸ் நல்லகள்வன் என்றே குறிப்பிடுகின்றார். ஆகவே நல்ல கள்வன் திருவிழா கிறிஸ்து உயிர்நீத்த நாளில் நினைவு கூறப்படுகின்றது.

தோழனிலிருந்து தொகுப்பு:
சி.சி.கொலிந்திரன்

## கிறிஸ்து உயிர்த்தது உண்மைதானா?..

10ம் பக்கத் தொடர்ச்சி...

இயேசு உயிர்த்தெழவில்லையாயின் பணம் கொடுத்து பொய் கூறும்படி கேட்பதற்கான அவசியம்யாது? ஏன் பணம் கொடுக்க முன்வந்தனர்? இதனை கூர்ந்து கவனிக்கின்றபோது நடந்தேறிய மாபெரும் உண்மையான காலதாமதம் எதுவுமின்றி உடனே மறைத்தாக வேண்டிய அவசரத் தேவையென்றே எண்ணத் தோன்றுகின்றது. அதுதான் உண்மையும் என்பது மேலும் ஒரு பகுதியில் நாம் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. பேதுருவும், யோவானும் தலைமைச் சங்கத்தினரால் விசாரனைக் குட்படுத்தப்பட்டபோது சங்கத்தாரின் உரையாடல்களில் சங்கத்தினர் (எதிராளிகள் - opponents) கூட கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று வாதாடிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே உள்ளது. மாறாக இதனைப் பற்றிப் பேசவோ அல்லது போதிக்கவோகூடாது என்று சீடர்களை எச்சரிப்பதனையே காணக் கூடியதாக உள்ளது (திரு.பணி.4:16-22) காரணம் சங்கத்தினர் இயேசுவினால் நடந்தேறிய புதுமைகளை நன்கறிந்திருந்தனர், சீடர்கள் படிப்பறிவற்ற பாமரர்கள் எனத் தெரிந்திருந்தனர், இயேசு உயிர்த்தார் என்ற உண்மையும் அவர்கள் அறிந்ததொன்றே, அத்துடன் முக்கிய குழப்பமாக பேதுரு, யோவான் ஆகியோரால் குணமாக்கப்பட்டிருந்த பிறவி முடவன் யூதர் மத்தியிலே இருந்தது யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாமல் போயிருந்தது.

ஆகவே மேலுள்ள சம்பவங்களைக் கவனிக்கும்போது நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சான்றுகள் (proofs) எமக்குக் கிடைகின்றன. அதிலும் சிறப்பான முறையில் எதிராளிகளின் உரையாடல், செயற்பாடுகள் போன்றவற்றிலிருந்தும் கிறிஸ்து உயிர்ந்த உண்மை எமக்குத் தெளிவாக வெளிப்படுகின்றது.

3. விஞ்ஞான மூலமாக நிறுவுதல்கள் (சான்றுகள்)

இயேசுவின் இறந்த உடலை மூடிய திருத்துகில் (Holy Shroud) பல ஆண்டுகளாக விஞ்ஞான ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இதன் மூலம் பல விஞ்ஞானிகள் கிறிஸ்து உயிர்ந்தெழுந்தார் என்று நிரூபிக்க முனைகின்றனர், நிரூபிக்கின்றனர். இந்தத் துணியிலே கதிரியக்கத்தினால் (Radiation) பதிவாகியுள்ள இரத்தக் கறையுடன் கூடிய ஆள் உருவம் காணப்படுகின்றது. அது வெரோணிக்காவின் கைத்துணியில் பதிவாகியிருந்த இயேசுவின் முகத்தைப் போன்று ஒரு முழு உருவமாக உள்ளது.

இது ஒரு தெய்வீகச் செயற்பாடு. காரணம் இறந்த ஒருவரின் உடலிலிருந்து எவ்விதமான கதிரியக்கமும் வெளிவரமுடியாது. சமநோக்கு நற்செய்திகளின்படி இயேசு குறைந்தது மூன்று மணிகளின் பின்னர் அடக்கம் பண்ணப்பட்டார்.

சாதாரணமான ஒருவரின் உடலிலிருந்து வெளிவரும் கதிரியக்க செயற்பாடானது துணியில் உருவம் பதியும் அளவிற்கு சக்தி வாய்ந்த தொன்றல்ல.

எனவே இது ஒரு அசாதாரண நிகழ்வு. அத்துடன் இது தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருந்ததொன்றல்ல மாறாக குறிப்பிட்ட ஓரிரு வினாடிகளில் நடந்தேறிய நிகழ்வொன்றேயாகும் (Brisk event)

(இத் திருத்துகிலின் ஒருபிரதி கண்டி - அம்பிட்டியாவிலுள்ள புனித ஆசிர்வாதப்பர் ஆச்சிரமத்திலே வைக்கப்பட்டு அங்கு செல்வோருக்கு அதனைப் பற்றிய தகுந்த விளக்கம் கொடுக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது)

நிறைவாக, மேற்கூறப்பட்ட அனைத்துத் தகவல்களையும் நோக்குமிடத்து கிறிஸ்து உண்மையிலேயே உயிர்ந்தெழுந்தார் என்பதற்கு தற்பொழுது எமது கைவசம் மேலும் சில சான்றுகள் உள்ளன. எனவே இவையனைத்துமே எமது விசுவாசத்தினை மென்மேலும் ஆழப்படுத்தும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை

# உயிர்ப்பு பெரு வெற்றியாகும்



### அறிமுகம்

உலகில் நிகழ்ந்த பல்வேறு போராட்ட வரலாறுகளை அறிந்திருக்கின்றோம், அனுபவித்தும் இருக்கிறோம். அவ்வாறான போராட்டங்களின் குறிக்கோள்களையும் முடிவுகளையும் நாம் ஆய்ந்து இருக்கிறோம். ஆனால் உலக போராட்டங்களோடு ஒப்பிடுகையில் முழுமையாய் வேறுபட்ட ஓர் போராட்டத்தை கிறிஸ்து இவ்வுலகில் மேற்கொண்டார். கிறிஸ்து தனி மனிதனாக போரிட்டார். தனது போராட்ட நகர்வில் பல்வேறு உரையாடல்களை மேற்கொண்டார். இறுதியிலே மாபெரும் வெற்றியை அடைந்தார். கிறிஸ்துவை அழிக்க முற்பட்டவர்கள் கிறிஸ்துவின் சாவோடு அனைத்தும் முற்றுப் பெற்றுவிட்டது என கங்கணங்கட்டி நின்றார்கள். ஆனால் நிலைமை முற்றிலும் மாறி கிறிஸ்துவின் உயிர்ப்பு மாபெரும் வெற்றியாகியது.

கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் எமது விசுவாசம் பயனற்றதாகியிருக்கும். எமது விசுவாசத்திற்கு அச்சாணியாக இருப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பே ஆகும். கிறிஸ்து சாவிற்கு ஓர் புதிய பொருள் தந்தார். வாழ்வின் முடிவு எனக் கருதப்பட்ட சாவை வாழ்வின் தொடக்கமெனக் கருத வழி ஏற்படுத்தினார்.

### இடம்பெயர்வும் ஏற்றுக் கொள்ளாமையும்

இறைவனின் நெறியை விட்டுப்பிரிந்து வாழ்ந்த மனிதனின் பரிதாபத்தைக் கண்நோக்கிய இறைவன் தனது விலைமதிப்பில்லாத சொத்தாகிய ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். 1995 ஐப்பசி 30 இல் நாம் மாபெரும் இடம்பெயர்வை எதிர்கொண்டோம். சொந்த இடங்களை, சொத்துக்களை, உறவுகளை, விட்டுப்பிரிந்து புதியதோர் சூழலில் வாழ வேண்டிய ஓர் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நாம் அனுபவித்த இடம்பெயர்வைவிட பிறிதொரு மாறுபட்ட இடம்பெயர்வை கிறிஸ்து மேற்கொண்டார். (பிலி. 2:6-7) விண்ணகத்தில் இருந்து மண்ணகத்திற்கு இடம்பெயர்ந்தார். மண்ணகம் பிறந்த இறைமகன் பல்வேறு வழிகளில், முறைகளில் தன்னிலை உணர்த்தினார். ஆனால் உலக நிலைகளில் சிந்திக்கப் பழக்கப்பட்ட மனிதன் கிறிஸ்துவை இனம்கண்டு கொள்ளவில்லை. இனம்கண்டு கொண்டால் தனது பகட்டும், பதவி, சொத்து, அநியாய வாழ்வு எல்லாம் மாற்றப்படவேண்டுமே எனச் சிந்தித்தான். எனவே இடம்பெயர்ந்து வந்த கிறிஸ்துவை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

### கிறிஸ்துவின் போராட்டம்:

மனிதனோ கடவுளைவிட்டுப் பிரிந்து உலகிற்கு அடிமையாக வாழமுற்பட்டான். அனைத்து வகையான அநீதிகளும், தீச்செயல்களும் தலைவிரித்தாடியது. உலகில் அனைத்து மட்டத்திலும் அநீதிகள் நிறைந்திருந்தன. இவ்வாறான ஓர் பின்னணியிலே கிறிஸ்து தனது போராட்டத்தை ஆரம்பித்தார். இப்போராட்டமானது முற்றுமுழுதாக அநீதிக்கு எதிரான ஓர் போராட்டமாகக் காணப்பட்டது. உண்மையை உண்மையென நேருக்கு நேர் எடுத்துக் கூறினார். போலித் தனங்களும், அடிமைத்தனங்களும் அகற்றப்பட வேண்டுமென முழக்கமிட்டார்.

தமது வெளிவேட வாழ்வு அம்பலத்திற்கு வந்ததைப் பொறுக்க முடியாத யூதத்தலைவர்கள் கிறிஸ்துவை தீர்த்துக்கட்ட சதி செய்தார்கள்; ஆனாலும் கிறிஸ்து பயந்து பின்வாங்கவில்லை. இன்னும் அதிகமாக உண்மைக்குச் சான்றுபகர்ந்தார். பல பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். உண்மை நிலையை எடுத்துக் கூறினார். ஆனால் மனிதன் தன்னிலை மாற்ற மறுத்தான். கிறிஸ்துவின் போராட்டம் அகிம்சை வழியில் அன்பு என்னும் ஆயுதம்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு துன்பங்களை தாமே சுமந்துகொண்டு அன்பின் நிமிர்த்தம் கடினமாக உழைத்தார். அவரது உழைப்பு வீண் போகவில்லை.

### மரணம்: வெற்றியின் படிக்கல்

கிறிஸ்துவின் வெற்றிச் செயற்பாட்டின் ஓர் படிக்கல்தான் அவரது மரணமாகும். மரணத்தால் கிறிஸ்துவை ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. துணிவோடு மரணத்தை ஏற்றுக் கொண்டார். "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது" (மத். 26:38) என்று ஜெஸ்தமனியில் கூறுகிறார். சாவு மனிதர் மீது ஆட்சி செலுத்தியது. (உரோ. 5:14) ஒருவர் வழியாக சாவு மனுக்குலத்தை தாக்கிறறு அவவாறே கிறிஸது வழியாக நிலைவாழ்வு உண்டு என்பதை உரோ 5:17 எடுத்துக் கூறுகின்றது. கிறிஸ்து சாவின் கொடுக்கை முற்றிலும் அழித்தார். கிறிஸ்துவை சாவால் ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. "அழிவிற்குரியது அழியாமையையும் சாவிற்குரியது சாகாமையையும். . . . சாவு முற்றிலும் ஒழிந்தது . . .சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி 15: 54-55)

சாவின் கொடுக்காக விளங்கியது பாவமே. கிறிஸ்து பாவத்தின் ஆதிக்கத்தை அழித்தார். கிறிஸ்துவின் விடுதலைப்போரின் உச்சக்கட்டம் சாவு ஆகும். சாவைக்கண்டு பலரும் பயந்தார்கள், வாழ்வின் முடிவுதான் சாவு என்று கருதினார்கள். ஆனால் கிறிஸ்து சாவை வாழ்வின் ஆரம்பமாக்கினார். இதுவே கிறிஸ்துவின் வெற்றிச்சமரில் முதல்வெற்றியாகும். கிறிஸ்துவின் மரணத்தோடு அனைத்தும் முடிந்துவிடும் என யூதர்கள் கருதினார்கள். ஆனால் அவர்களது எண்ணங்கள் தவிடுபொடியாகின.

### உயிர்ப்பு: வெற்றிக்களிப்பாகும்

போராட்டத்தின் பலன் வெற்றியாகும். கிறிஸ்து பாவத்தை வென்று வெற்றிவீரராக உயிர்த்தெழுகின்றார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளாக திருத்தூதர்கள் விளங்குகிறார்கள் (தி.தூ. 1-21, 2:32-34). "தம் சிலுவையினால் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களைக் கிறிஸ்து பிடுங்கிக்கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்" (கொலோ 2:15).

கிறிஸ்து இறையரசை இவ்வுலகில் நிலைநாட்டி வெற்றிவீரராக தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார் (தி.தூ. 2:34-35). கிறிஸ்துவின் அரசின் முழுமை அவரது இரண்டாம் வருகையோடு நிறைவேறும் என நாம் விசுவசிக்கின்றோம்.

கிறிஸ்துவின் போராட்டத்தில் அவர் அடைந்த மிகப்பெரிய வெற்றி அவரது உயிர்ப்பே ஆகும். ஆனால் இவ்வுலக அரசுகள் பல்வேறுபட்ட போராட்டங்களை மேற்கொள்கிறார்கள். பல்வேறு வெற்றிகளை ஈட்டுகிறார்கள். அந்த வெற்றிகளை முன்னிட்டு காலத்திற்குக் காலம் விழா எடுத்து மகிழ்கின்றார்க்ள். ஆனால் கிறிஸ்துவின் போராட்டத்தோடும் அவரது வெற்றியோடும் ஒப்பிடுகையில் இவை அனைத்தும் வெறுமையானவையாக, பொருளற்றவையாக மாறிவிடுகின்றன.

கிறிஸ்துவினுடைய வெற்றி முழுமனுக்குலத்திற்குமான வெற்றியாக அமைந்தது. மனுக்குலம் முழுவதும் மீட்கப்பட்டது. "ஆயினும், நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகிறோம்" (உரோ. 8:37)

### முடிவுரை:

பல காலமாக அடிமைப்படுத்தப்பட்டு வாழ்ந்த தமிழர்களாகிய நாம் இன்று ஓரளவு சமாதான நீரோட்டத்தில் இணையக்கூடிய நிலையில் இருக்கின்றோம். நடைபெறுகின்ற சமாதான முயற்சிகளை அல்லது அதனூடாக எமக்குக் கிடைக்கவிருக்கும் உலகம் சார்ந்த சமாதானம் மாத்திரம் எமக்குரிய வெற்றியல்ல. மாறாக எமக்கு வேண்டியது முழுமனித விடுதலையும் அதனோடு கூடிய வெற்றியுமே ஆகும். குறுகிய மனப்பான்மையுடன் சிந்தித்து குறுகிய வட்டத்திற்குள்ளே நாம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கலாம். இவை அனைத்தும் வீணே.

கிறிஸ்துவினுடைய வெற்றியிலே நாமும் வெற்றி காணவேண்டும். எமது வெற்றிகள் கிறிஸ்துவின் வெற்றியால் புனிதப்படுத்தப்பட வேண்டும். உலக அரசுகள் இது தான் வெற்றியென்று எமக்கு வெற்றியைத்தர முயலலாம். ஆனால் அது ஒருபோதும் தூயவெற்றியாக இருக்கமுடியாது. எப்போதும் அங்கே சுயநலம் இருக்கும். ஆனால் கிறிஸ்துவின் வெற்றி தூயவெற்றியாகும்

கிறிஸ்துவின் வெற்றியை எமது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் மூலம் நாம் வெளிப்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் உயிர்ப்பு முழுமையான மகிழ்ச்சியை எமக்குப் பரிசாகத் தந்தது எனலாம்.

பி. தே. யூட்தாஸ்

## உயிர்த்த இயேசுவுடன் ஓர் உரையாடல்

### அமைதி திரும்பும்வரை நீர் எம்மோடிருந்தால் நாம் அழியமாட்டோம் நிச்சயம் வெல்லுவோம்

ஒப்பந்தம் தன்னை ஒழுங்காய் நிறைவேற்றி
இப்பந்தம் தனைவிடுத்து உயிர்த்தெழுந்த இயேசுவை நான்
எப்படியோ இடைமறித்து "ஐயா ஓர் நிமிடம்" என்றேன்
என்ன? என்ற பாவனையில் என்னை ஒரு கணம் பார்த்தார்.
"நாற்பது நாட்களின் பின் ஆரோகணம் தானே – அந்த
ஆரோகணத்தைச் சற்றுப் பிற்போட்டால் என்ன?" என்றேன்
வியப்போடு எனைப்பார்த்த விடுதலை வீரனவர்
"தொடர்ந்து பேசு" என்றார் பூரித்துப் போய்விட்டேன்
"புரிந்துணர்வு ஒப்பந்தம் புரியவே இல்லை ஐயா
ஒப்பந்த மீறல் தான் ஒழுங்காய் நடக்குது
படையினர் அட்டகாசம் பாலியல் வல்லுறவு
போரின் அச்சுறுத்தல் போக்குவரத்துத் தடை
ஆதிக்க வெறிபிடித்த வல்லரசின் அறிவிப்பு
ஓரினச்சேர்க்கை ஒழுங்கற்ற நடத்தைகள்
போதைப் பொருட்களுடன் நீலப்படங்கள்" என்று
பொரிந்து தள்ளிவிட்டேன் அழுத கண்களுடன்
பொறுமையாய்க் கேட்ட தேவன் புன்னகைத்தவாறே
"ஆரோகணத்தை ஒத்தி வைப்பதற்கும்
அவலங்களின் பட்டியலுக்கும்
என்ன சம்பந்தம்?" என்றொரு கேள்வி கேட்டார்
"அமைதி திரும்பும்வரை நீர் எம்மோடிருந்தால்
நாம் அழியமாட்டோம் நிச்சயம் வெல்லுவோம்
அலகையை வெல்லுவீர்! அகிலம் உய்யும்
அதற்காகத்தான் ஐயா அப்படிச் சொன்னேன்" என்றேன்
வாய்விட்டுச் சிரித்த தேவன் வலக்கரம் தனை உயர்த்தி
"உங்களுக்கு சமாதானம்" என்று சொன்ன அந்த வேளை
டாண் என்று மணி ஒலிக்க திடுக்கிட்டெழுந்தேன்
"அட இது கனவுதானா?" என்று நான் அங்கலாய்த்தேன்.

"நவாலியூர் நாயகி"

### ஊருலகை அலங்கரிக்கும் உன்னரிய உத்தானம்

மனித வளர்ச்சி மாண்பில் துலங்க
புனித பூங்கதிர் பூமியில் பூத்தது.
சாந்தி ஒளியை ஏந்திய வேந்தன்
சந்திக்க உயிர்த்தான் சாதனை தாங்கி
வரலாற்றுச் சிறப்பு வரவேற்று உன்னை
வரம்வேண்டி வணங்க வந்தாட்சி செய்வாய்
பரிசுத்த பூம்பாதம் தரிசித்து நின்று
எரிசுத்தி செய்வோம் எம் பாவ சுமையை
உள்ளும் புறமும் உருகுகின்ற பாவிக்கு
அள்ளித் தருவாய் ஆண்டவனே மன்னிப்பாய்
புண்பட்ட பூமியை புதுப்பிக்கும் தலைவா
உன்திட்டக் கருவிகளாய் உருமாற்று எம்மை
பேரன்பு மலர்ந்திடும் பெரும்பனி நிலைக்கும்
ஊருலகை அலங்கரிக்கும் உன்னரிய உத்தானம்

- ஞா. அரியமலர், மிருசுவில்

### எம் இறைவன் உயிர்த்தாரே

போரின் கொடுமையினால்
போக்கிடமின்றித் தவித்தோமே
விமானத்தின் தாக்குதலினால்
விரட்டி அடிக்கப்பட்டோமே
ஷெல்லின் முழக்கங்களால்
செவிடாகிப் போனோமே
பசிப்பிணி வாட்டிடவே
பரிதவித்து நின்றோமே
என்றாலும் எமை மீட்க
எம்இறைவன் உயிர்த்தாரே
அணிதிரண்டு வாருங்கள்
அவரண்டை சென்றிடுவோம்

- எஸ். எஸ். காந்தன், கஸ்தூரியார் வீதி

### உயிர்த்தார் இறைமகனார்

உயிர்த்தார் எழுந்தார்
இறைமகனார்
உலகினை என்றும்
மீட்டிடவே
எழுந்தார் எமது
இரட்சகரும் எம்மை
நிதமும் காத்திடவே
சாத்தான்
கொடுமையை
விரட்டிடவே சாவை
வென்றார் எம்
இறைவன் மீட்பை
எமக்குத் தந்திடவே
மீண்டு உயிர்த்தார்
மீட்பருமே
பாவிகள் நாமும்
எந்நாளும் பரமன்
பாதம் பணிவோமே

*சி. தனுஜன், தரம் 8C*
*யாழ் மத்திய கல்லூரி*

### *விடுதலைப் பாதையில்*

சிலுவை தனிலே
சிதைத்து தன்னையே
மனுக்குல விடிவிற்காய்
மரித்தார் இயேசு
பாவத்தின் கட்டுக்கள்
பாறையாய் இருந்தது
பாடுகள் வழியாய்
பாறையை தகர்த்தார்
மனிதனாய் பிறந்து
மனிதனாய் வாழ்ந்து
புனிதனாய் ஆகி
புதுமைகள் செய்தார்
உண்மை விடுதலை
உலகிற்கு தந்து
இறைவனின் அன்பை
இதயத்தில் நிறைத்தார்
தனது வாழ்வால்
தத்துவம் போதித்து
வாழ்வின் பொருளை
வசந்தமாய் காட்டினார்
கல்லறையிலிருந்து
விடுதலை வாழ்வை
காட்டிய பெருமான்
இயேசு பிரானே
எமக்காய் பிறந்து
எமக்காய் மரித்து
எம்மை மீட்க
உயிர்த்தே எழுந்தார்
மூன்று உலகும்
முழுமை பெற்று
என்றும் வாழும்
இயேசுவின் உயிர்ப்பால்
நாமும் அவரின்
நாமத்தைச் சொல்லி
விடுதலைப் பயணத்தில்
வீறுநடை போடுவோம்

*– சூரியநிலா*
*ஈச்சமோட்டை*

# கிறிஸ்து உயிர்த்தது உண்மைதானா?

**அருட்சகோதரன் லிக்கோன்ஸ் பிகிறாடோ**
**சவேரியார் குருத்துவக் கல்லூரி**

இறைமகன் கிறிஸ்து "வரலாற்று - இயேசுவாக" இவ்வுலகில் பிறந்து வாழ்ந்து போதித்து, பாடுகள் பட்டு இறந்தார். தாம் முன்னுரைத்த படியே மூன்றாம் நாள் உயிர்ந்தெழுந்தார். இது எமது விசுவாசம் "கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே" (1கொரி15:17)

கிறிஸ்துவின் உயிர்ப்பில்தான் திருச்சபையும் கிறிஸ்தவமும் வேரூன்றியுள்ளது என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. அப்படியாயின் இறைமகன் கிறிஸ்து உண்மையிலே உயிர்த்தெழுந்தார் என்பதற்கு கிறிஸ்தவர்களான எம்மிடம் உள்ள நிரூபணங்கள் (Proofs) எவை?

திருவிவிலியம் (Scripture), பாரம்பரியம் (Tradition) ஆகியவற்றை நம்பிக்கையின் ஆணிவேராகக் கொண்டு வளர்கின்ற திருச்சபையானது தனக்கென்று சில நிரூபணங்களைக் கொண்டுள்ளது அவை;

1. விவிலியத்தில் காணப்படும் வெளிப்படையான தகவல்களும் இயேசுவை அடக்கம் செய்த வெற்றுக் கல்லறையும்.
2. விவிலியப் பகுதியினை விமர்சன நோக்குடன் பார்க்கும் போது காணப்படும் தகவல்கள்.
3. விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் கிடைக்கும் நிறுவுதல்கள்.

1. விவிலியத்தில் காணப்படும் வெளிப்படையான தகவல்களும் இயேசுவை அடக்கம் செய்த வெற்றுக் கல்லறையும்.

முதலில் மகதலா மரியாளும் தொடர்ந்து பேதுரு, கிறிஸ்துவின் அன்புச்சீடர் ஆகியோரும் வெறுமையான கல்லறையில் கல் புரட்டப்பட்டு உள்ளே துணிகள் ஒரு புறத்திலே சுருட்டிவைக்கப்பட்டிருப்பதையும் கண்டனர். (யோவான் 20:1-10)

ஏம்மாவுஸ் பயணப்பாதையில் இரு சீடருடன் இயேசு வழிநடந்து அவர்களது விசுவாசமின்மையைக் கடிந்துகொண்டு மெசியா உயிர்த்தெழுந்துவிட்டார், என்று கூறியது. (லூக் 24:25-27)

மகதலா மரியாளுக்கு கல்லறை அருகிலேயே தோட்டக்காரன் போன்று இயேசு காட்சியளித்து தாம் உயிர்ந்து விட்டதாக கூறியது (யோவான் 20:15-16)

திபேரியாக் கடலருகிலே சீடருக்குத் தோன்றி அவர்களுடன் சேர்ந்து உணவு உட்கொண்ட பின்னர் பேதுரு தம்மேல் கொண்டிருக்கும் அன்பினைப் பற்றி வினவியபின் தனது மந்தையினை மேய்க்கும் பொறுப்பினை கொடுத்தது. (யோவா அதி.21)

திதிம் என்ற தோமா இல்லாத வேளையும், மீண்டும் ஒரு வாரத்தின் பின் பதினொரு சீடருக்கும் காட்சியளித்தது. (யோவா. 20:19-29)

இறுதியாக கிறிஸ்து இவ்வுலகினைப் பிரிந்து தந்தையிடம் செல்லும்போது கொடுத்த தரிசனம் (மத் 28:20, மாற்கு 16:19, லூக்கா 24:50-51)

இவ்வாறான காட்சிகளும் சீடர்களின் "இயேசு-அனுபவமும்" விவிலியத்தில் எமக்குக் கிடைக்கின்ற வெளிப்படையான தகவல்களாக, ஆதாரங்களாக காணப்படுகின்றன. வெறுமனே வெற்றுக் கல்லறையானது கிறிஸ்துவின் உயிர்ப்பை நிரூபிக்க முடியாது. ஆனால் கிறிஸ்து உயிர்த்தார் என விசுவசிக்கின்ற ஒவ்வொருவரின் விசுவாசத்திற்கும் இது ஒரு ஆதாரமாக காணப்படுகின்றது.

2. விவிலியப் பகுதியினை விமர்சன நோக்குடன் (Critical reading) பார்க்கின்ற போது காணப்படும் தகவல்கள்

சென்ற்றின சங்கத்தின் தீர்மானப்படி இயேசுவின் கல்லறைக்கு காவல்காத்த படைவீரருக்கு பணம் கொடுக்கப்பட்டது. அத்துடன் இயேசுவின் உயிர்ப்புப் பற்றி எழுதப்படுகின்ற வினாக்களுக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்று படைவீரருக்கு சங்கத்தினரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பதில் (Ready-made answer) கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது; "நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது இயேசுவிடம் சீடர்கள் வந்து அவரது உடலைத் திருடிச்சென்றுவிட்டனர்" (மத். 28:11-15).

இதனை நோக்குமிடத்து படைவீரர் அனைவரும் தூங்கும் வேளையில் நடந்த நிகழ்வுகள் யாவும் அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? அதற்கு சந்தர்ப்பம் இல்லை. அப்படித் தெரிந்திருந்தால் காவல் காக்கப் போனவர்கள் கைகட்டிக் கொண்டு நின்றிருக்க மாட்டார்கள், நிச்சயமாக தடுத்திருப்பர். படைவீரரின் நிலைமை இப்படியிருக்கையில் யூத சங்கத்தினரின் நிலையினைப் பார்ப்போமாயின் அவர்கள் படைவீரருக்கு பணம் கொடுத்து "இயேசு உயிர்த்தெழவில்லை என்றும் சீடர்கள் அவரது உடலைத் திருடிச் சென்று விட்டனர்" என்று பொய் கூறும்படி கேட்டுக் கொண்டனர். அத்தோடு ஆளுநரால் பிரச்சனை வராதபடி தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் உறுதி மொழி கூறுகின்றனர்

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்)

# நாம் மரியன்னைக்கு சூட்டுகின்ற மாலை செபமாலை ஆகும்

## - தும்பளை லூர்து கெபிப் பெருவிழாவில் ஆயர்

தன்னை நம்பி வருபவர்களை இறைவன் ஒருபோதும் கைவிடுவதில்லை. இறைவனால் ஆகாததும் ஒன்றுமில்லை. எம்மிலுள்ள இறைசாயல் இறைவனது மாண்பையும் மாட்சியையும் விளக்குகின்றது. யேசுவின் முகத்தை உற்று நோக்கி எமது செபமாலைப் பக்தியை வளர்க்க வேண்டும் - இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் அண்மையில் பருத்தித்துறை தும்பளை புனித லூர்து அன்னை ஆலய பெருவிழாவில் மறையுரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் கடந்த 20 ஆண்டுகளாக எமது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்ல மரியன்னை எமக்காக வேண்டிக் கொண்டிருக்கிறாள். அன்று கானா ஊர் திருமணத்தில் மக்களைப் பார்த்து "யேசு சொல்வதை எல்லாம் செய்யுங்கள்" என்று கூறி அவர்களுக்காக மகனிடம் பரிந்து பேசினார்.

ஆகவே நாம் மரியன்னைக்கு சூட்டுகின்ற மாலைகள் செபமாலையாக இருக்க வேண்டும். அன்று யேசுவின் முகத்தை முதலில் உற்று நோக்கியவர்கள் மரியா, சூசை, இடையர்கள். நாம் ஏன் ஆண்டவரின் முகத்தை உற்று நோக்க வேண்டும் என்றால் நாம் கிறிஸ்துவாக மாறுவதற்காகும். நாம் அவராக மாறும்போது தேவதாய் பூரிப்படைகிறாள்.

எங்களை கிறிஸ்துவோடு இணைக்கின்ற, மோட்சத்திற்கு எடுக்கின்ற ஏணியாக செபமாலை திகழ்கின்றது. செபமாலைப் பக்தி எம்மை ஒருபோதும் கைவிடாது. கடந்த போர்க்கால சூழலில் பயணம் செய்ய செபமாலை எமக்கு பக்கபலமாக இருந்தது. எமது பரிசுத்த தந்தை கூறும் புத்தி "செபமாலை சொல்லும்போது ஆண்டவரின் அன்பு முகம், கருணை முகம் உற்று நோக்கப்பட அவரது திருமுகம் எம்மில் பதியும் என்பதாகும்" செபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும் - எனத் தெரிவித்தார்.

திருமதி டெவ்லின் றொபேட் ஜேசுராஜன் சங்குவேலி.

# சிலுவையின் நிழலில் சிதறிய சிந்தனைகள் (8ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 13. மரியாவின் மடியில் . . . மரித்த இயேசு

இயேசுவின் திருஉடலை மர்யா தன்மடியில் தாங்குகறாள.
இடம்:கடல்
இரவுநேரம். கடலில் வந்துகொண்டிருந்த படகுகளில் ஒன்று மற்றொன்றைப் பார்த்துக் கேட்டது, அதோ அந்த கடற்கரையில் தன்னந்தனியாக நின்று ஒளிவீசும் கலங்கரை விளக்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாய்?
தெரியவில்லையே என்றது இரண்டாவது படகு. முதல் படகு சொன்னது, கூட்டமாகத்தான் பணி ஆற்றலாம் என்றில்லை, தன்னந்தனியாகக்கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு கூறவில்லையா? சுருங்கக் கூறினால், தனி என்றிருப்பினும் பணி என்றிரு. பத்துமாதம் பத்தியம் காத்து பெற்றெடுத்த பிள்ளையை தன்மடியில் வைத்து மனங்கலங்குகிறாள் அன்னைமரியா. சிரிக்கின்ற போது சேர்ந்து சிரிக்கும் இந்த உலகம் அழுகின்றபோது மட்டும் நாம் தனியாக அழ விட்டுவிடும்.
செல்வம் இருக்கின்ற போது சேர்ந்துவரும். வறுமை வாட்டும்போது ஒதுங்கிவிடும்.
நல்லபெயர் இருக்கின்றபோது நம்மைச்சார்ந்து புகழும் பெயருக்குக் களங்கம் வந்தால் காறி உமிழ்ந்துவிடும்.
திறமை இல்லையென்றால் அனுதாபம் காட்டும் இருந்தால் பொறாமைப்படும்.
சமூகத்தில் ஈடுபட்டால் ரொம்பவும் அலட்டுகிறான் என்று சொல்லும், ஈடுபடாவிட்டால் பயனற்றவன் என்று கொல்லும். அன்னை மரியாளை ஆழ்ந்த துயரம் ஆட்கொள்கின்றது.
ஆனால் ஆறுதல் சொல்ல யாருமில்லை. அந்த அன்னையின் கன்னங்க ளில் வழிந்தோடும் கண்ணீருக்கு வருத்தம் தெரிவிக்க யாருமில்லை எனவே தன்னந்தனியாக அழுகின்றாா. தாய்மரிக்கு அதுபுதிதல்ல. இதோ ஆண்டவரின் அடிமை என்று சொன்னபொழுதிலிருந்து அவள், பிறரின் சோகங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளத் துணிந்தாள். எனவே கல்வாரி மலைவரை வந்துவிட்டாள். இலட்சியப் பயணங்களில் நாம் பல வேளைகளில் இப்படித்தான் இருக்கவேண்டும். தனிமை வெறுமை சோகம் பரிவு இறப்பு இவற்றைச் சந்திக்கவேண்டும். தனி என்றிருப்பினும் பணி என்றிருக்க வேண்டும்.
இதுவே, இன்று அன்னை மரியா அனைவருக்கும் கற்றுத்தரும் அன்புப் பாடம்.

## 14. இயேசுவின் அடக்கம் நம் வாழ்வின் தொடக்கம்

இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கின்றார்கள்.
இடம்:வழியோரம்
நெருஞ்சிப் புல் வருகிறவர் போகிறவர் கால்களையெல்லாம் தன்முள்ளினால் குத்திப் புண்ணாக்கிக் கொண்டிருந்தது.
மனிதர்களின் காலைக் குத்தி அவர்களுக்கு சினத்தை உண்டாக்குகிறாய் பார். . . பார். . . அவர்கள் ஏதாவது ஒருநாள் உன்னை வேரோடு பிடுங்கி, எருவாய் புதைத்து விடுவார்கள் என்றது அருகம்புல். நெருஞ்சி சூடானது.
என்னைக் காலால் மிதித்து வதைக்கிறவர்களையெல்லாம் நான் ஏன் தாங்கவேண்டும்? அது சொன்னது,
வதைபடுவதைவிட புதைபடுவது மேல் மானுடமைந்தன் இயேசு புதைக்கப்படுகிறார். இல்லை. விதைக்கப்படுகிறார்.
வரலாற்றில் பலருடைய அடக்கம்தான் வாழ்வின் விடியலின் விடுதலையின் தொடக்கமாய் அமைந்துள்ளது. தன்னலத்தில் அடக்கி பிறர்நலத்தில் தொடக்கி பொதுநலத்தில் தொடர்வதுதான் உண்மைவாழ்வு. தீமையை அழிக்க, தீண்டாமையை ஒழிக்க லஞ்சலாவண்யங்களை தீர்த்துக்கட்ட அமைப்புமுறைகளில் அடிப்படைமாற்றம்காண அனைவருக்கும் விருப்பம். ஆனால், யார் தொடங்குவது? நமது பெயர் கெட்டுவிடுமோ? நம்மைக் கொன்று விடுவார்களோ? என்றெல்லாம் எண்ணி பல நல்ல காரியங்களைத் தொடங்கத் தயங்குகிறோம்.
இயேசுவின் பிள்ளைகள் நாம், அவரைப்போல் முன்னோடிகளாய் இருக்கவேண்டும். கல்வாரிகளைக் கண்டு கலங்கவேண்டாம் இயேசுவோடு செல்வோம். அவரோடு இறப்போம் வதைபடுவதைவிட புதைபடுவதுமேல்.

## 15. கல்லறை திறந்தது, . . காரிருள் மறைந்தது

இயேசு உயிர்த்தெழுகின்றார்
காகம் ஒன்று மாமிசத் துண்டைப் பார்க்கிறது.
பறந்துவந்து காகம் அதைக் கவ்வி எடுத்தது. மற்ற காகங்களும் கழுகுகளும் இதைவிரட்ட ஆரம்பிக்கின்றன! மாமிசத் துண்டைக் காப்பாற்றிக் கொள்ள காகம் உயர உயரப் பறக்கிறது! மற்றக் காகங்களும் கழுகுகளும் சளைக்காமல் துரத்துகின்றன. ஒரு கட்டத்தில் காகம் மாமிசத் துண்டை நழுவவிட்டு விடுகிறது! அவ்வளவுதான் இத்தனைநேரம் இதைத் துரத்தி வந்த பறவைகள் தரையில் விழுந்த மாமிசத்தை நோக்கி ஓடிவிடுகின்றன!
காகத்திற்கு விடுதலை கிடைக்கின்றது.
துரத்தி வந்த காகம் ஒன்று சொன்னது
சுயநலம் துறப்பவன் பொதுநலம் காப்பவன். இயேசு, நமக்காய், நம்மீட்புக்காய், விடுதலைக்காய், மானிட விடியலுக்காய் பிறந்து இறந்து உயிர்த்தார். அவர் உயிர்ப்பிலே அனைத்து உண்மைகளும் உயிர்த்தன.
இயேசுவின் வெற்றி நமது வெற்றி. தீமையின் மீதும் சுயநலங்கள் நோய் நொடிகள் மீதும் நாம் காணவேண்டிய வெற்றியின் முதல்கனி. ஜுபிலியின் உன்னத பரிணாமம், உயிர்ப்பே விசுவாசத்தின் அடிப்படை. அதுவே நமது வாழ்வு நமது பணி இறையாட்சி. நாமும் இயேசுவோடு மடிந்தால் அவரோடு உயிர்ப்போம்.

# அருள்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித் திட்டம்

## 10 புலமை பரிசில்கள்

2003இல் வெளியான க.பொ.த. (சா.த) பரீட்சை முடிவுகளின்படி அதிக தகைமைகளைப் பெற்று சித்தியடைந்து க.பொ.த. (உ.த) வகுப்பிற்கு (2003 சித்திரை) தகுதிபெற்ற 10 மாணவர்களுக்கு மேற்படி கல்வி உதவித் திட்டம் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

பத்து மாணவர்களும் யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாணவர்கள் தகுதியறிந்து பங்குத்தந்தையர்கள் தமது வட்டாரக் குரு முதல்வர் ஊடாக கல்வித் திட்ட நிர்வாகத்திடம் அவர்கள் பெயர்களை சமர்ப்பிப்பார்கள்.

எச்சமயத்தை சார்ந்த மாணவர்களும் இப்பரிசில்களுக்கு தகுதியுடையோராகலாம்.

க.பொ.த. (உ.த) வகுப்பைத் தொடர அடிப்படை பொருளாதார வசதியற்ற திறமைசாலி மாணவர்களுக்கு மட்டுமே இவ்வுதவி ஆகக்கூடியது (02) வருடங்களுக்கு வழங்கப்படும். வழங்கப்படும் உதவி கல்வி நேரடித் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பதை கல்வி உதவித் திட்டம் உறுதிசெய்யும்.

புலமைப் பரிசில்கள் சம்பந்தமான இறுதி முடிவுகள் எல்லாம் கல்வி உதவித் திட்ட நிர்வாகத்திற்கே உரிமையானது. இவ்வுதவியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் இதற்கென உரிய விண்ணப்பப் படிவத்தை உங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 15.05.2003ற்கு முன்பதாக உங்கள் பங்குத்தந்தையர்களிடம் சமர்ப்பிக்கவும்.

ஆயர் இல்லம்
த.பெ. இல 02, யாழ்ப்பாணம்

செயலர்
BEAS

க.பொ.த. (சா.த) பெறுபேறுகள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் முக்கியமானதாகும். குறிப்பிட்ட திகதிக்கு பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

# செபமாலைத் தாசர் செயல்வீரன்

## வேண்டுவோம் உம்புனித நிலை வரங்கிடைக்க

வானபரன் தான் நினைத்த வாரிசாக
வடபுல மக்களுக்கு தந்த செல்வம்
ஞானவழி காட்டி யெம் நாட்டில்
நல்விசு வாசம்வளர உழைத்த வீரன்
கானகச் செல்வியாம் செபமாலை அன்னையின்
காவலனாய் பணிசெய்த கருணைமகன்
தோமஸ் என்ற நாமம் பூண்ட
செபமாலைத் தாசர்சபை அமைத்த தூதன்

ஈழத்திருச் சபையின் இருளகற்றும் ஒளிவிளக்கு
ஏழ்மைநிறை தியாகவாழ்வு இரங்கும் உள்ளம்
வாழ்வு கொடுக்கவந்த வானவனின் நற்சீடன்
வற்றாத ஊற்றான அருட்சாதன வாய்க்கால்
நாள்முழுதும் நற்கருணை நாதனின் அருள்வேண்டி
நாட்டிற்காய் செபிக்கின்ற சபையோரின் தலைவன்
சூழ்கலி நீங்கிச் சுதந்திர வாழ்வு மலர
தோமஸ் அடிகளே எமக்காய் மன்றாடும்.

ஆண்டவனை தஞ்ச மெனக் கொண்டே
ஆழ்தியான முறையில் வாழ்ந்து காட்டினீர்
ஆண்டுகள் முப்பத்தேழு மறைந் திட்டாலும்
ஆண்டவர் உம் விண்ணப்பத்தால் அருள்புரிந்தார்
நீண்டவெம் விண்ணகப் புனித வாழ்வில்
அன்னை மரிவழி ஆண்டவனிடம் செல்வோம்
வேண்டுவோம் உம்புனித நிலை வரங்கிடைக்க
"வேதநாயகன்" தாயே எமக்காய் மன்றாடும்

- ஆதீ ராஜ் -

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடனடியாக முழுமையாக நடைமுறைப்படுத்துவதாலேயே சமாதான சூழ்நிலையை நீடிக்கச் செய்யலாம்

## ஈஸ்ரர் செய்தியில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



### ஈஸ்ரர் வாழ்த்து

அமைதியான ஒரு சூழ்நிலையில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு ஈஸ்ரர் விழாவினைக் கொண்டாடும் அனைவருக்கும் ஈஸ்ரர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

ஆண்டவர் இயேசு பாடுகள், மரணம் என்கின்ற வேதனைமிக்க நிகழ்வுகளைக் கடந்து உயிர்ப்பின் மகிமையடைந்தார். இதன் வழியாக புது யுகத்தையும் புதிய வாழ்வையும் எமக்குப் பெற்றுத் தந்தார். உயிர்ப்பு விழா அல்லது பாஸ்கா விழா இதனை நினைவுகூர்ந்து கொண்டாடும் காலமாகும். ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்கின்ற நிகழ்வு களோடு எமது வாழ்வின் அனுபவ நிகழ்வுகளையும் இணைத்து அர்த்தம் காணும் விழாவே ஈஸ்ரர் விழாவாகும்.

### புத்தாண்டு வாழ்த்து

தமிழ் - சிங்கள புத்தாண்டும் இதே காலப் பகுதியில் மலர்கின்ற வேளையில் இப்புத்தாண்டினை மனமகிழ்வோடு கொண்டாடும் அனைவரையும் நினைத்து **அவர்களுக்கும்** எம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

### ஈராக் யுத்தம்

போர் சத்தங்களும் இறப்புச் செய்திகளும் இப்போது இல்லை என்ற நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற வேளையில் ஈராக் யுத்தமும் அதன் அழிவும் பற்றிய செய்திகள் எம்மை மீண்டும் மனோ ரீதியாக பாதிக்கத் தொடங்கிவிட்டன. எமது பத்திரிகைகள் தாங்கி வருகின்ற இக்கொடிய போர் பற்றிய செய்திகள் உளவியல் ரீதியாக எமது மண்ணில் முன்பு நடைபெற்ற போரையும் அதன் இழப்புக்களையும் இறப்புக்களையும் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. யுத்தத்தை தடுத்து நிறுத்த திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் எடுத்த அனைத்து இராஜீக முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. இரு தனி மனிதர்களின் ஆணவமும் போர்வெறியும் இன்று மனித உயிர்களை அழித்துக் கொண்டிருக்கின்றது. போரை நிறுத்துங்கள் என்ற தமது கோரிக்கையை பாப்பரசர் நிறுத்திவிடாது இன்னும் குரல் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். உலக சமாதானத்தை கருத்தில்கொண்டு பாப்பரசரின் இந்த வேண்டுகோளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனித உயிர்களை அழிவிலிருந்து காக்க வல்லவர் இறைவன் ஒருவரே என்ற நம்பிக்கையோடு இப்போர் நிறுத்தப்பட உருக்கமாக செபிப்போம்.

### புரிந்துணர்வு ஒப்பந்த ஓராண்டும் நடைமுறைப்படுத்தலும்

எம் மண்ணில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு கடந்துவிட்ட நிலையிலும் நிலைமைகள் இன்னும் முழுமையாக அமைதியையும் சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் பெற்றுக் கொள்ளவில்லை.

பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நகர்ந்து கொண்டிருந்தாலும் இடையிடையே நடைபெறுகின்ற அசம்பாவிதங்களும் அடாவடித்தனங்களும் யுத்த நிறுத்த மீறல்களும் எம்மை பயமுறுத்திக் கொண்டேயிருக்கின்றன. பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நகர்ந்து செல்ல புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மறுபுறம் முழுமையாக நடைமுறைப்படுத்துவது இருதரப்பினருக்கும் இடையிலான சமாதான நிலையை நீடிக்க உதவும். தமிழ் மக்களின் நாளைய சுபீட்சமான சமாதான வாழ்வை கருத்தில்கொண்டு இரு தரப்பினரும் இதில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம்.

### உயர் பாதுகாப்பு வலயமும் மீள்குடியேற்றமும்

இராணுவ பாதுகாப்பு என்கின்ற போர்வையில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்து தமிழ் மக்கள் பலரை தம் சொந்த இல்லிடங்களுக்கு செல்ல விடாமல் தடுத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமானது என்று எண்ணத் தோன்றுகின்றது. உயர் பாதுகாப்பு வலயங்களை தமது வதிவிடங்களாக கொண்டு வாழ்ந்த தமிழ் மக்களை மீளவும் தம் சொந்த இடங்களில் பரீட்சார்த்தமாகவேனும் குடியமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற எமது வேண்டுகோளை மீளவும் வலியுறுத்த விரும்புகின்றோம்

### யாழ் நகர மையப் பகுதி இராணுவ முகாம்

யாழ் நகரின் மையப் பகுதியில் அமைக்கபடவிருந்த இராணுவ முகாம் பலரின எதிர்ப்பையும் வேண்டுகோளையும் அடுத்து நிறுத்தப்பட்டது நிம்மதியை தருகிறது. இராணுவ முகாமினை அமைக்க திட்டமிட்ட இந்த இடம் யாழ் நகரத்திற்கு அழகையும் தூய காற்றையும் மன அமைதியையும் தருகின்ற ஒரு கடற்கரைப் பிரதேசமாகும். அப்பிரதேசத்தினை மரங்கள் நிறைந்த திறந்த வெளியாக மக்கள் இளைப்பாற இடமளிக்கும் விதமாக தயார் செய்வதே சிறந்ததாகும். மாநகர சபைக்கு சொந்தமான வேறு காணிகளில் பொதுஜன அமைதியையும் பாதுகாப்பையும் குழப்பாத வகையில் தனிமையான ஒரு இடத்தில் இவ் இராணுவ முகாமை அமைப்பதே பொருத்தமானதாகும்.

### அடிப்படை உரிமைகளும் முட்டுக்கட்டைகளும்

எப்போ எம் மண்ணில் நிரந்தர சமாதானம் நிலவப் போகிறது? என ஏங்கிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலைப்பாடு கவலை தருவதாகவே இருக்கிறது. பல முற்போக்கு சிங்கள அரசியல் கட்சிகளும் பௌத்த மதத் தலைவர்களும் தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் வழங்க எப்போதும் முட்டுக்கட்டை போடுவதையே தமது பணியாக கொண்டிருப்பதும் வேதனை தருவதாக இருக்கிறது.

### ஊடகங்களின் செயற்பாடு

ஊடகங்கள் எப்போதும் நடுநிலைமையோடு செயல்படுவதே தர்மமாகும். சில தென்பகுதிப் பத்திரிகைகள் செய்திகளை திரித்தும் மிகைப்படுத்தியும் பக்கம் சார்ந்தும் வெளியிடுவது சமாதான முயற்சிகளை இன்னும் பின்னடையவே செய்யும். சமாதானத்திற்கெதிராக செயல்படுபவர்களும் குரல் கொடுப்பவர்களும் தம் நிலையை மாற்றிக்கொள்ள இறைவன் அருள்புரிவாராக.

காலம் நீண்டு போகின்ற போது விடயங்கள் கனிந்து வருவது கடினமாகி விடலாம். உரிய காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இலங்கை மண்ணில் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். பிரதமர் மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இடைவிடாத முயற்சியும் புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சமாதான முன்னெடுப்பும் கூடிய விரைவில் முழு வெற்றியடைய இறைவன் தன் வல்லமை மிக்க கரத்தால் அருளாசி வழங்குவார்.

உயிர்த்த இயேசு எம் மண்ணிற்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினைத் தர அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் - யாழ் ஆயர்**

## சமாதானம் தருவீரே




உலகினை உய்விக்க
உயிர்த்து எழுந்தவரே
சாவினை வென்று
சத்தியனாய் எழுந்தவரே
ஒற்றுமையைத் தருவதற்கு
ஒளியாக உதித்தவரே
சத்தியத்தில் வழிநடத்தி
சமாதானம் தருவீரே

- சீ. சுவீற்றா
யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிசன் வித்தியாலயம்

## தொடக்கி வைப்பீரே

உயிர்த்த இயேசுவே
அபலைகள் எமக்கு
தொலைந்த வாழ்வை
தொடக்கி வைப்பீரே

- இராசநாயகம் தர்சன்
169, கஸ்தூரியார் வீதி

இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டுமென்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை

## என்றும் காத்திடுவீர்

ஓசன்னா முழங்கவைத்து
இறைமகனாய் வந்தவரே
எம்மை மீட்டெடுக்க
பாடுகளால் உயிர்த்தவரே
ஒளியாக நீர்வந்து
என்றும் காத்திடுவீர்

- சி. நிசாந்
யாழ் மத்திய கல்லூரி

## புதுவாழ்வு உதிக்கட்டும்

நிலவில்லா வானம்போல்
இருண்டிட்ட மனிதவாழ்வில்
அருள்ஒளியின் புதுவாழ்வு
உன்னுயிர்ப்பில் உதிக்கட்டும்

[illegible]

# நிலையான அமைதி எம் மண்ணிற்கு கிடைக்க உயிர்த்த இயேசு ஒளி தருவார் - பாதுகாவலன் ஆசிரியரின் ஈஸ்ரர் வாழ்த்து

பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களே சாவிலிருந்து வெற்றிவீரனாய் உயிர்த்து எழுந்து சத்திய மறைக்கு சான்று பகர்ந்த இயேசு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினை எம் மண்ணுக்கு தந்திடுவார் என்ற நம்பிக்கையோடு அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா ஈஸ்ரர் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

கட்டம் கட்டமாய் பேச்சு வார்த்தைகள் வெற்றி காணவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாய் நடைமுறைப் படுத்தப்படவும் அதன்வழி நிலையான அமைதி எம் மண்ணிற்கு கிடைக்கவும் உயிர்த்த இயேசு ஒளி தருவார்.

போரையும் அதன் அழிவுகளையும் அனுபவித்து அலுத்துப்போன எமக்கு ஈராக் யுத்தம் மீண்டும் பழைய ஞாபகங்களையும் பயஉணர்வையும் தரத் தொடங்கியுள்ளது.

இறை இரக்கத்தில் சமாதானம் நிறைந்த ஓர் உலகைக் கட்டியெழுப்புவோம் என்று ஜனவரி முதலாம் திகதி புத்தாண்டு தினத்தன்று வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் ஈராக் யுத்தம் மூள முதலும் மூண்ட பின்னரும் உலக சமாதானத்திற்காக தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டே வருகின்றார். போர் அவலங்களையும் அனுபவங்களையும் பெற்றுக் கொண்ட நாம் போர் என்றும் எங்கும் வேண்டாம் என்று உரத்துக் குரல் கொடுப்போம். உயிர்த்த இயேசு எம் மண்ணில் நீடித்த அமைதி நிலவத் துணைபுரிவாராக.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஆசிரியர், பாதுகாவலன்

இப் பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் ஓவ்செற் முறையில் 2003ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. T.P. 021-2222378